643

REGISTERED No. M. 6165. 643 1.53 அணா 2

பத்ஹுல் இஸ்லாம்

FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

மார்ச்சு 1953.

விஷயம்		பக்கம்
எலயாஸ்		1
நீ என்ன செய்திருப்பாய்?		7
பாஸோவின் மர்மம்	(தொடர்கதை)	8
குலாப் ஜான்	(மாதர் பகுதி)	14
சிறு கதை		,,
இதய தாகம் (வேளாங்கன்னி, சாக்திதாஸன்)		15
தெய்வீகக் காதல்—தொடர்கதை (மாஸ்டர் கமல் பாபு)		22
விகடத் துண்டுகள்		31

...ல் இஸ்லாம் ப்ரீஸ் :
...20, ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

JL
Q7N24 ; N24FI
N53
187018
... 1953

பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனில்

	வருஷ சந்தா	ரூ. 1–8–0
	தனிப் பிரதி	அணா. 2
மற்ற வெளி நாடுகளில்	வருஷ சந்தா	ரூ. 2–0–0

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

மானேஜர்,

பத்ஹுல் இஸ்லாம்,

20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

உர்து ஆஸான்.

தமிழ் தெரிந்தவர்கள் ஆசிரியரின்றி 20 நாட்களுக்குள் உர்துபாஷையை பேசவும் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்ள ஏதுவான புஸ்தகம் இது ஒன்றே. இன்றே ஒரு உர்து ஆஸான் புஸ்தகத்தை வாங்கி இந்தியாவின் முக்கிய பாஷையாகிய உர்துவைக் கற்றுக்கொள்ளுங்கள்.

உயர்ந்த கிளேஸ்டு காகிதத்தில் 256 பக்கங்களில் அச்சிட்டு அழகிய இங்கிலீஷ் கலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது. விலை ரூ. 2–8–0

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்.

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

... 1953
MADRAS

பத்ஹுல் இஸ்லாம்.

மார்ச்சு—1953.

எலயாஸ்.

எலயாஸுக்கு திருமணமான மறு வருஷமே அவருடைய தகப்பனார் இறந்து விட்டார். அவருடைய தகப்பனார் எலயாஸுக்கு அதிகமாக சொத்து ஒன்றும் வைத்து விட்டு போகவில்லை. அப்போது அவருக்கு ஏழு குதிரைகளும், இரண்டு பசுக்களும், சுமார் இருபது ஆடுகளும் தான் இருந்தன. ஆனால் எலயாஸ் காரியங்களை நல்ல விதமாகச் செய்யத் தருந்தவர். நாளடைவில் அதிகமான சொத்துக்களை அடைய ஆரம்பித்தார். அவரும் அவருடைய மனைவியும் காலையிலிருந்து மாலை வரை வேலை செய்தார்கள்; மற்றவர்களை விட முன்பு எழுந்து, பின்பு படுக்கைக்குச் சென்றார்கள். அவருடைய சொத்துக்கள் ஒவ்வொரு வருஷமும் அதிகமாயின. இவ்வாறு வாழ்ந்துக் கொண்டு எலயாஸ் கொஞ்சம், கொஞ்சமாக அதிக செல்வாக்கை யுடையவரானார். முப்பத்திஐந்து வருஷத்திற்கு பிறகு எலயாஸுக்கு 200 குதிரைகளும், 150 மாடுகளும், 1200 ஆடுகளும் இருந்தன. சம்பளக்காரர்கள் அவருடைய மந்தைகளை கவனித்தார்கள்; சம்பளக்காரர்கள் பால் கரந்து, மோர், தயிர், வெண்ணை, நெய் முதலியவைகள் தயார் செய்தார்கள். எலயாஸுக்கு எல்லாம் அதிகமாக இருந்தன. அந்த இடத்தில் இருந்த ஒவ்வொருவரும் அவனை பொறாமையுடன் நோக்கினர். அவர்கள் அவரைப் பற்றி, "எலயாஸ் அதிஷ்டசாலி; அவருக்கு எல்லாம் அதிகமாக இருக்கின்றன. இந்த உலகம் அவருக்கு ஒரு நல்ல இடமாகவே இருக்க வேண்டும்" என்று சொன்னார்கள்.

நல்லஸ்திதியில் இருப்பவர்கள் எலயாஸைப் பற்றி கேள்விப் பட்டு அவருடைய நட்பை விரும்பினார்கள். வெகு தூரத்திலிருந் தெல்லாம் விருந்தாளிகள் வந்தனர். அவர்களை எலயாஸ் வர வழைத்து, அவர்களுக்கு உண்ண உணவும், குடிக்க பானமும் கொடுப்பார். யார் வந்தாலும் தயிர், மோர், டீ, சர்பத், மாமிசம் இவைக ளெல்லாம் அவர்களுக்கு முன் வைக்கப்படும். எப்பொழுது

விருந்தாளிகள் வந்தாலும் ஒரு ஆடாகிலும் அறுக்கப்படும்; சில சமயம் இரண்டு ஆடுகளும் அறுக்கப்படும். விருந்தாளிகள் அதிகமாக யிருந்தால் ஒரு மாடுகூட அறுக்கப்படும்.

எலயாஸுக்கு மூன்று குழந்தைகள்: இரண்டு ஆணும், ஒரு பெண்ணும். அவர்கள் யாவருக்கும் திருமணம் செய்து வைத்தார். எலயாஸ் ஏழையாய் இருந்த போது அவருடைய பிள்ளைகள் இருவரும் அவருடன் வேலை செய்தார்கள்; ஆட்டு மாட்டு மந்தைகளை தாங்களே கவனித்துக் கொண்டார்கள். ஆனால் அவர் பணக்காரரான உடன் அவர்கள் கெட்டுப் போனார்கள்: பெரியவன் ஒரு தனிச்சண்டையில் கொல்லப்பட்டான்; சிறியவன் குடிக்கும் வழக்கத்தை கைக்கொண்டு பிடிவாதம் பிடித்த ஒருத்தியை திருமணம் செய்துக் கொண்டு தகப்பனாருக்கு அடங்கி நடக்க மறுத்ததால் தகப்பனாருடன் வாழ முடியாமல் போயிற்று. ஆகையால் அவர்கள் பிரிந்தார்கள்.

எலயாஸ் தனது மகனுக்கு ஒரு வீட்டையும் கொஞ்சம் மாடுகளையும் கொடுத்தார். இவைகள் எலயாஸின் செல்வாக்கை குறைத்தது. இதற்கு பிறகு எலயாஸின் ஆட்டு மந்தைகளுக் கிடையில் ஒருவித நோய் கண்டு, அநேகம் இறந்தன. அதற்கு பிறகு மோசமான அறுவடைகள் அறுக்கப்பட்டன; வைக்கோல் குறைந்தன; குளிரில் அநேக மாடுகள் இறந்தன. திருட்டு பையன்கள் அவருடைய தேர்ந்த மாடுகளை கொள்ளை யடித்தார்கள். எலயாஸின் சொத்து குறைந்து கொண்டே சென்றன. அவருடைய சொத்து சிறுத்து, சிறுத்துக் கொண்டு வரும் போது அவருடைய பலமும் குறைந்துக் கொண்டு வந்தது. எலயாஸ் தனக்கு எழுபது வயதாவதற்கு முன் தனது வீட்டு தளவாடங்களையும் விற்க தொடங்கி விட்டார். கடைசியாக தன்னிடம் இருந்த மாடுகளை விட்டும் பிரிய நேரிட்டது. அவருக்கு இவைகள் யாவும் எப்படி ஆனது என்று தெரிவதற்கு முன், அவர் யாவற்றையும் இழந்தார். எலயாஸ் அவருடைய முதிர்ந்த வயதில் தானும் தன்னுடைய மனைவியும் வேலை செய்ய நேரிட்டது. எலயாஸுக்கும் அவர் மனைவி ஷேம் ஷெமாகிக்கும் தாங்கள் அணிந்திருக்கும் உடைகளைத் தவிர வேறு எந்த வித பொருளும் கிடையாது. அவரை விட்டு பிரிந்த மகன் தூர தேசத்திற்கு சென்று விட்டான்; அவருடைய மகளும் இறந்து விட்டாள்; ஆகையால் வயதான இந்த இருவர்களுக்கும் உதவி செய்ய யாரும் கிடையாது.

அவர்களின் அண்டை வீட்டுக்காரராகிய முஹம்மது ஷா இவர்களின் மேல் இரக்கம் கொண்டார். முஹம்மது ஷா பணக்காரரும் அல்ல; ஏழையும் அல்ல; ஆனால் சௌகரியமாக வாழ்ந்து

187018

வந்தார்; அவர் ஒரு நல்ல மனிதர். எலயாஸின் வரவேற்கும் தன்மைகளை நினைத்து, இரங்கி, அவரிடம, "என்னிடம் வந்து இருப்பீராக, நீரும், உமது மனைவியும், வெயில் காலத்தில் எனது மலாம்பழம் தோட்டத்தில் உமது பலத்திற்கு தகுந்த அளவு வேலை செய்; குளிர் காலத்தில் எனது மாடுகளுககு உணவு வை; உமது மனைவி ஷேம ஷெமாகி எனது ஆடுகளுக்கு பால் கரக்கட்டும். நான் உங்கள் இருவருக்கும் உண்ண உணவும, உடுக்க உடையும் அளிக்கிறேன். உங்களுக்கு ஏதாகிலும் தேவையாய் இருந்தால் என்னிடம் சொல்லுங்கள்; தருகிறேன்" என்றார்.

எலயாஸ் தனது அடுத்த வீட்டுக்காரர் முஹம்மது ஷாவுக்கு நன்றி தெரிவித்து விட்டு, அவரும் அவர் மனைவியும் முஹம்மது ஷாவிடம் சாதாரண வேலையாட்களாக வேலை செய்ய தொடங்கினர். முதலில் அவ்வாறு இருப்பது கடினமாக தோன்றியது. பிறகு அவ்வாறு வாழுதல் பழக்கமாகி விட்டதால் அவர்களுக்கு சதாரணமாக இருந்தது. அவர்கள் தங்களுடைய சக்திக்கு தகக அளவு வேலை செய்தாரகள்.

இப்படிப்பட்டவர்களை வேலையில் வைத்திருப்பது முஹம்மது ஷாவுக்கு அனுகூலமாகவே இருந்தது. ஒரு சமயம தாங்களே எஜமானர்களாக இருந்ததால் காரியங்களை எவ்வாறு நடததிக் கொண்டு போக வேண்டும் என்பதை அறிந்தவர்களாய் இருந்தனர்; சோம்பேரிகளாக யில்லை. அவர்களால் செய்ய முடியும வேலைகளை எல்லாம் செய்தார்கள். எனினும் அவ்வளவு உன்னத நிலையில் இருந்த இவர்கள் இந்த நிலையில் வந்து இருப்பதை பார்க்க முஹம்மது ஷாவுக்கு வருத்தத்தை யுண்டு பண்ணியது.

முஹம்மது ஷாவின் பந்துக்கள் வெகு தூரத்தி லிருந்து அவரை சந்திக்க வந்திருந்தார்கள். ஒரு முல்லாவும் அவர்களுடன் வந்திருந்தார். அன்று ஒரு ஆடு அறுககப்பட்டது. விருந்தாளிகள் உணவு எல்லாம் உண்ட பிறகு, பஞ்சணையில் உட்கார்ந்துக் கொண்டு டீ குடித்துக் கொண்டு, முஹமமது ஷாவுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். எலயாஸ் தனனுடைய வேலைகள் யாவையும் முடித்த பிறகு ஒரு திறக்கப்பட்டிருநத கதவு பக்கமாக சென்றார். முஹம்மது ஷா எலயாஸ் போவதைப் பார்த்து தன்னுடைய விருந்தாளிகளில் ஒருவரை நோக்கி "நீங்கள் அந்த கிழவர் போவதைப் பார்த்தீர்களா?" என்றார்.

"ஆம், பார்த்தேன். அவரிடம் என்ன நூதனம்?"

"இது தான்—ஒரு காலத்தில் எங்களுக் கிடையில் அவர் தான் மிகுந்த பணக்காரர். அவர் பெயர் எலயாஸ். நீங்கள் அவரைப் பத்தி கேள்விப் பட்டிருப்பீர்கள்"

"உண்மையில் நான் அவரைப் பற்றி கேள்விப் பட்டிருக்கிறேன். நான் அவரைப் பார்த்ததில்லை. ஆனால் அவருடைய புகழ் வெகு தூரம் பரவி இருந்தது"

"ஆமாம். தற்போது அவரிடம் ஒன்றும் கிடையாது. என்னுடன் என்னுடைய வேலைக்காரராய் வாழ்கிறார். அவருடைய வயதான மனைவியும் இங்கு தான் இருக்கிறாள். அவள் ஆடுகளுக்கு பால் கரக்கிறாள்."

அந்த விருந்தாளிகளுக்கு ஆச்சரிய முண்டாயிற்று. "செல்வாக்கு ஒரு சக்கிரம் போல் சுற்றுகிறது. ஒரு மனிதனை தூக்குகிறது; இன்னொருவனை தாழ்த்துகிறது. தான் இழந்தவைகளை குறித்து அந்த கிழவர் வருத்தப்பட வில்லையா?" என்றார்.

"யாரால் சொல்ல முடியும். அவர் அமைதியாகவும், சமத்தாகவும் இருந்து நன்றாக வேலை செய்கிறார்."

"நான் அவருடன் பேசட்டுமா? நான் அவருடைய வாழ்க்கையைப் பற்றி கேட்க விரும்புகிறேன்" என்றார் விருந்தாளி.

"ஏன் கூடாது?" என்றார் முஹம்மது ஷா.

"பாட்டனாரே வாரும். எங்களுடன் டீ குடிக்க வாரும். உமது மனைவியாரையும் இங்கு அழைத்து வாரும்"

எலயாஸ் தனது மனைவியுடன் நுழைந்தார். தனது எஜமானிடமும், மற்றுமுள்ள விருந்தாளிகளுக்கும் ஸலாம் சொன்ன பிறகு ஒரு சிறு ஜெபம் செய்து விட்டு கதவுக்கு அருகே உட்கார்ந்தார். அவர் மனைவி பர்தாவுக்கு பின்புறம் எஜமாட்டியுடன் உட்கார்ந்தாள்.

ஒரு கோப்பை டீ எலயாஸுக்கு கொடுக்கப்பட்டது. எலயாஸ் குனிந்து தாழ்மையுடன் அதை பெற்றுக் கொண்டு குடித்து விட்டு கோப்பையை கீழே வைத்தார்.

"சரி தகப்பனாரே, எங்களை பார்த்த உடன் நீங்கள் கவலை படுகிறீர்கள் என்று நம்புகிறேன். இது உமது முன் செல்வாக்கையும், தற்போதைய தாழ்மையையும் நினைவூட்டும்" என்று அவருடன் பேச விருமபிய விருந்தாளி கூறினர்.

எலயாஸ் சற்று புன்சிரிப்புற்று சொன்னார்:

"நான உங்களுக்கு சந்தோஷம் என்ன, துர்ரதிஷ்டம் என்ன வென்று சொல்ல வேண்டுமானல் நீங்கள் நமபமாட்டீர்கள். நீங்கள் என்து மனைவியைக் கேளுங்கள். அவள் ஒரு ஸ்திரி, அவளுடைய

மனதில் இருப்பது தான் அவளுடைய நாவிலும் இருக்கும். அவள் எல்லா உண்மையையும் உங்களுக்கு சொல்லுவாள்.''

விருந்தாளிகள் பர்தாவின் புறம் நோக்கினர்.

"சரி, பாட்டி, உங்களது முன் சந்தோஷம் தற்போதைய துர்ரதிஷ்டத்துடன் வைத்துப் பார்த்தால் எப்படி இருக்கு? என்று சொல்லும்'' என்றார்.

ஷேம் ஷெமாகி பர்தாவுக்கு பின் புறம் இருந்து பதில் அளித்தாள்:

"நான் நினைக்கிறது இது தான்: நான் ஐம்பது வருஷமாக சந்தோஷத்தை நாடி வாழ்ந்தேன். ஆனால் நான் அதைக் கண்டு பிடிக்கவில்லை. இப்பொழுது தான், சென்ற இரண்டு வருஷங்களாக, எங்களிடம் ஒன்றும் இல்லாமல் இருக்கும் போது, வேலைக்காரர்களாக வாழ்ந்த போது, நாங்கள் உண்மையான சந்தோஷத்தைக் கண்டோம். நாங்கள் தற்போது இருக்கும் நிலையை விட மேலானதை விரும்பவில்லை''

விருந்தாளிகளுக்கு ஆச்சரிய முண்டாயிற்று. எஜமானனுக்கும் ஆச்சரிய முண்டாயிற்று. எஜமான் எழுந்து அவளுடைய முகத்தைப் பார்க்க தானே பர்தாவை ஒதுக்கினார். அவள் அங்கு தனது இரண்டு கைகளையும் கட்டிக் கொண்டு தனது புருஷனை நோக்கினவளாய் புன்சிரிப்புடன் நின்றான். புருஷனும் அவளைப் பார்த்து சிரித்தார். அந்த கிழவி சொன்னாள்:

"நான் உண்மையைப் பேசுகிறேன். கேலி செய்யாதீர்கள். அரை நூற்றாண்டாக நாங்கள் சந்தோஷத்தை நாடினோம். நாங்கள் பணக்காரர்களாக இருந்த வரையில் நாங்கள் அதை அடையவில்லை. தற்போது எங்களிடம் ஒன்றும் இல்லாததாலும், வேலைக்காரர்களாக அமைந்திருப்பதாலும், நாங்கள் அவ்வளவு சந்தோஷத்தையடைந்தோம். எங்களுக்கு இதை விட மேலானது தேவையில்லை.''

"ஆனால் உமது சந்தோஷம் எதில் இருக்கிறது'' என்று அந்த விருந்தாளி கேட்டார்.

"ஏன், இதில் தான்: நாங்கள் பணக்காரர்களாக இருந்த போது எனது புருஷருக்கும் எனக்கும் அவ்வளவு கவலைகள் நாங்கள் இருவரும் பேச நேரம் கிடையாது; எங்களுடைய ஆத்மாவைப் பற்றி நினைக்கவோ, அல்லது கடவுளிடம் பிரார்த்திக்கவோ நேரம் கிடையாது. எம்மிடம் விருந்தாளிகள் வந்தால் அவர்கள் ஏதாவது நினைப்பார்களே என்று அவர்களுக்கு என்ன

உணவளிப்பது என்ன வெகுமானம் அளிப்பது என்று யோசிக்க வேண்டும். அவர்கள் போன உடன் நாங்கள் எங்கள் வேலைக்காரர் களை கவனிக்க வேண்டும். அவர்கள் எபபொழுதும் வேலை செய்யா மல் இருந்து நல்ல உணவை அடைய விருமபுவாாகள். நாங்கள் அவாகளிட மிருந்து எவ்வளவுக்கு எவ்வளவு அடைய முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு அடைய முயலுவோம். ஆகையால் நாஙகள் பாபம் செய்கிறோம். இன்னும் காங்கள் ஏதாவது ஓநாய் எங்களுடைய கோழிகளை அல்லது ஆட்டுக் குட்டிகளை தூக்கிக் கொண்டு போய் விடுமோ அல்லது திருடர்கள் எங்களுடைய குதிரைகளை எடுத்துக் கொண்டு போய் விடுவார்களோ என்று பயப்பட வேண்டும். எங்கு ஆடுகள் தங்களுடைய குட்டிகளுக்கு மேல் படுத்து அவைகளை நசுக்கி விடுகின்றதோ என்று கவலைப்பட்டு இரவில் அடிக்கடி எழுந்து அவைகளை கவனிக்க வேண்டும். ஒரு வேலையை செய்து முடித்த உடன் மற்றொரு வேலை துடங்கும்: குளிர்காலத்தில் எப்படித் தேவைபபட்ட எல்லா வைக்கோலையும் வாங்குவது? இவைக ளல்லாமல் எனது கிழவனும் நானும் அடிக்கடி மாறுபட்டவர்களாக இருப்போம். அவர் இதை இதை செய்ய வேண்டும் என்பார். நான் அதற்கு மறுப்பேன். ஆகையால் தகராறுகள் வரும். ஆகையால் காங்கள மறுபடியும் பாபம் செய் தவர்களாக ஆகிறோம். ஆகையால் காங்கள் ஒரு தொந்தரவி லிருந்து மற்றொரு தொந்தரவுக்கு செல்வோம். ஒரு பாவத்தி லிருந்து மற்றொரு பாவத்திற்கு செல்வோம்.

"அப்படி என்றால் இப்பொழுது?"

"இப்பொழுது எனது புருஷரும் நானும் காலையில் விழித்த உடன் எங்களுக்கு இடையில் அன்பாக பேசுகிறோம். எங்க ளுக்கு இடையில் சண்டை போட ஒன்றும் இல்லாததால் சமாதானமாக இருக்கிறோம். எங்களுடைய எஜமானருக்குத் தொண்டு செய்வதை விட வேறு எங்களுக்கு கவலை கிடையாது. எங்கள் பலம் விட்ட அளவு வேலை செய்கிறோம். அந்த வேலையை பிடிவாதத்துடன் செய்கிறோம். எங்களால் எங்களுடைய எஜமான் லாபம் அடைய வேண்டுமே தவிர நஷ்டம் அடையக் கூடாது என்று வேலை செய்கிறோம். எங்களுக்கு சாப்பாடு இருக்கிறது; உடுக்க உடை யிருக்கிறது. எங்களுககு பேச நேரம் இருக்கிறது. எங்களுடைய ஆத்மாவைப் பற்றி நினைக்கவும், கடவுளை பிராததிக்க வும் நேரம் இருக்கிறது. ஐமபது வருஷம் சந்தோஷத்தை நாடி யிருந்தும் கடைசியாக தற்போது சந்தோஷத்தை யடைந்தோம்."

விருந்தாளிகள் சிரித்தார்கள்.

ஆனால் இலயாஸ் சொன்னார் :

"சிரிக்காதீர்கள், நண்பர்களே இது சிரிக்க வேண்டிய விஷயம் அல்ல. நாங்களும் முதலில் முட்டாள்களாக இருந்தோம். செல்வாக்கு அழிந்ததைக் குறித்து அழுதோம். இப்பொழுது கடவுள் எங்களுக்கு உண்மையைக் காண்பித்து விட்டார். நாங்கள் இதை எங்கள் மனதைத் தேர்த்திக் கொள்ள சொல்லவில்லை. உங்களுடைய நன்மைக்காக சொல்லுகிறோம்."

முல்லா சொன்னார்: "எலயாஸ் உண்மையைச் சொன்னார். அதையே குர்ஆனிலும் சொல்லி இருக்கிறது"

விருந்தாளிகள் சிரிப்பை நிறுத்தினார்கள். ஆலோசிப்பவர்களானார்கள்.

நீ என்ன செய்திருப்பாய்?

ஒருநாள் மாலை நேரத்தில் நான் எனது வீட்டில் இருக்கும் போது காற்றும் புயலுமாக மழை வந்தது. மின்சார கம்பிகள் காற்றில் அறுக்கப்பட்டதால் எனது வீட்டிலுள்ள மின்சார விளக்குகள் எல்லாம் அவிழ்ந்து விட்டன. வீட்டிலுள்ள ஒரு ஹரிகன் விளக்கை உபயோகிக்கலாம் என்று பார்த்ததில் அதில் மண்ணெண்ணெ கொஞ்சமாக இருந்ததாலும், விளக்கின் திரி கட்டையாக எண்ணெயில் தோயாததாலும் விளக்கு எறியவில்லை. எண்ணெ வாங்க வேண்டுமானால் அரைமைல் தூரம் மழையில் போய் வாங்கி வரவேண்டும்; குடையும் கிடையாது. இந்நேரத்தில் நீ என்ன செய்திருப்பாய்?

பிப்ரவரி மாத கேள்விக்கு விடை :—

எனது காதை ஒரு பிரகாசமான விளக்கின் அருகில் வைத்தேன். உள்ளே இருந்த பூச்சி பிரகாசத்தைக் கண்டு விளக்கை நோக்கி வெளியே வந்து விட்டது.

மார்ச்சு மாத கேள்விக்கு விடை :—

விளக்கிலுள்ள எண்ணெ திரியை தொடும் அளவு விளக்கில் தண்ணீர் ஊற்றினேன். தண்ணீருக்கு மேல் எண்ணெ நின்று விளக்கு எறிந்தது.

பாஸோவின் மர்மம்.

(தொடர் கதை 3-வது பகுதி)

அத்தியாயம் 9

ஷம்ஸ் தனது காரிலேயே அந்த மில்லருகே போகும்போது, அந்த மில் வீட்டின் ஜன்னல் வழியாக ஒரு ஆள் தன்னை கவனிப்பதாக தெரிந்தது. அவ்வீட்டின் முன் காரை நிற்பாட்டி இறங்கியதும், கதவை திறந்து கொண்டு, மைக் கையில் ஒரு பழைய கம்பளியுடன் வெளி வந்தான். வந்ததும் ஷம்ஸை பார்க்காததுபோல் கம்பளியின் மேலுள்ள தூசியை வெளியில் உதறினன். அவனை ஷம்ஸ் பார்த்து "வந்தனம்! எல்லா சாமான்களையும் சுத்தம் செய்கின்றீர்கள் போல் தெரிகிறது" என்ருர்.

"ஆம்! இது விலையுயர்ந்த கம்பளி, இப்போது இதைப்போல் எப்படி வாங்குவது. முன்பு ஒரு காலத்தில் குதிரைப் பந்தயத்தில் பணம் ஜெயித்தேன். நல்லவிதமாக வாழ்ந்தேன். அந்த காலத்தில் வாங்கிய கம்பளி இது" என்ருன் மைக்.

"நீங்கள் பெரிய அதிர்ஷ்டசாலி, நீங்கள் இங்கு தான் வசிக்கிறீர்களோ?"

"ஆம்"

"இங்கு அன்னியர்கள் வருவதுண்டோ"

"கிடையாது. இன்று அன்னியர் நீங்கள் தான் வந்திருக்கிறீர்கள்"

"எனக்கு முன்னல் ஒரு அன்னியர் இங்கு வந்தது எப்பொழுது?"

"ஒரு மாதம் அல்லது அதிகமிருக்கலாம்"

இதற்கிடையில் வீட்டின் முன் கார்டைர் பதிவு புதியதாக தெருவில் தெரிந்ததை கடைக்கண்ணுல் பார்த்துக் கொண்டார் ஷம்ஸ்.

"ரொட்டி, பால் இவைகள் உங்களுக்கு வருகின்றதா?"

"காலையில் வண்டியில் கொண்டு வருகிருர்கள்"

"எனக்கு பழைய பில்டிங்களை பார்ப்பதற்கு மிக இஷ்டம். இந்த மில் வீட்டின் உள்போய் பார்க்கலாமா?"

"இதில் நான் வசிக்கும் இடத்தை தவிர மற்ற இடத்தை பார்க்கலாம்" என்ருன் மைக்.

அவ்வீட்டின் கீழ்பாகம் பூராவும் மைக் வசிக்கும் இடம். அதனால் சரி என்று ஒப்புக்கொண்டு, வெளியிலிருந்து படிகள் மூலமாய் மெத்தைக்குப் போனார். அங்கு ஒரு பெரிய தானிய அறை காலியாக சிலந்திகூடுகள் நிறைந்ததாக பாழடைந்திருந்தது. பின்னால் மைக்கும் போனன். "இந்த மில்லின் சக்கரத்தை சங்கிலியால் கட்டியிருக்கிறதல்லவா?" என்ருர் ஷம்ஸ்.

"ஆம் கட்டப்பட்டிருக்கிறது" என்று மைக் சொன்னான்.

"பக்கத்திலுள்ள டாம் ஜேனுடன் அன்னியோன்யம் உண்டல்லவா?" என்று மெதுவாக ஷம்ஸ் கேட்டார்.

இக்கேள்வி கேட்டதும், மைக் முகம் சட்டென்று மாறியது. பிறகு சமாளித்து சாதாரணமாக பதிலளிப்பதுபோல் "வருவார்கள் எப்பொழுதாவது. யாரை சொல்லுகின்றீர்கள்? அந்த வயலிலிருக்கிருர்களே அவர்கள் தானே" என்ருன் மைக்.

"உனக்கு அவர்களைப்பற்றி நன்ருகத் தெரியும். ஒன்றும் தெரியாத பைத்தியக்காரனைப் போல் பாசாங்கு செய்யாதே. அவர்களைப்பற்றி சாமாச்சாரம் சொல்" என்று அதிகாரத்தோரணையில் உரக்க சொன்னர்.

தனக்கு ஒன்றும் தெரியாததுபோல் தலையை ஆட்டி பாசாங்கு செய்தான். பளீர்! கன்னத்தில் ஒரு அடி வைத்தார் ஷம்ஸ். அவன் உடம்பு நடுங்கியது கண்கள் சிவந்தன. கோபத்துடன் "வெளியே போ என் வீட்டைவிட்டு போ வெளியே" என்று கர்ஜித்தான்.

"எனக்கு இஷ்டப்பட்டால்தான் போவேன். எனக்கு தெரிய வேண்டிய விஷயங்களையெல்லாம் நீ தெரிவித்தபின் தான் நான் போவேன்" என்று சொன்னர் ஷம்ஸ். இதற்கிடையில் அவன் கைகளைப் பார்த்தார். கஷ்டத்துடன் வேலை செய்யும் கைகளல்ல அவை; ஒன்றும் வேலை செய்யாமலிருக்கும் பணக்காரர்களின் கைகளைப் போல் இருந்தன. "நீ யார்? இவ்விடத்தில் என்ன செய்கின்ருய்?" என்ருர் ஷம்ஸ். "நான் படங்கள் வரைகின்றேன். அவைகளை விற்கமுடியவில்லை" என்ருன். "நீ அடிக்கடி வெளியே போய் ஏதாவது திருடி அதைக்கொண்டு இங்கு வாழ்வதுபோல்

தோன்றுகிறது" என்றார் ஷம்ஸ். "பொய்" என்று அலறினான். "நான் நினைத்ததை சொன்னேன். உனக்கு ஏன் கோபம் வருகிறது" என்றார் ஷம்ஸ். "இவ்வாறெல்லாம் பேசுவதற்கு நீ யார்?" என்று மைக் கேட்டான். "நான் டாம் ஜேன் விஷயமாக வந்துள்ளேன். அவர்களைப்பற்றி உனக்கென்ன தெரியும்?"

"அவர்கள் சில வாரங்களுக்கு முன் அந்த வயலுக்கு வந்து தங்கி யிருக்கிறார்கள். அவ்வளவு தான்" என்றான்.

"அவர்களுக்கு சிநேகிதர்கள் உண்டா?"

"எனக்கு தெரியாது."

"நீ அங்கு போயிருக்கிறாயா?"

"ஒரு முறை ரொட்டி இரவல் வாங்கச்சென்றேன்"

"ரொட்டி வாங்கவா அல்லது வீட்டைப் பார்க்கவா?"

"ரொட்டி வாங்கச் சென்றேன்"

"பின் என்ன நடந்தது"

"அவன் ஏதோ கணக்கு பார்த்துக் கொண்டிருந்தான்"

"பணம் எண்ணிக் கொண்டிருந்தானா?"

"இல்லை ஏதோ எழுதிக்கொண்டிருந்தான்"

"சரி! பின்"

மைக் திடீரென்று "என்னை இவ்வாறெல்லாம் கேள்வி கேட்க நீ யார்? உனக்கு என்ன அதிகாரம் உண்டு?" என்று திருப்பிக் கேட்டான்.

"நான் டாம் ஜேன் அவர்கள் சம்பந்தமாக வந்துள்ளேன். நீ சொல்வதை நிற்பாட்டாமல் சொல்" என்றார் ஷம்ஸ்.

"அதற்குப்பின் ஒன்றுமில்லை. என்னை டீ குடிக்குமாறு வேண்டினார்கள் குடித்தேன். பிறகு இந்த ஆற்றைப்பற்றி ஏதேதோ பேசிக் கொண்டிருந்தோம். அவ்வளவு தான்"

"அவர்களின் சிநேகிதர்களைப்பற்றி உன்னிடம் பேசினார்களா?"

"இல்லை"

"இந்த வயலுக்கு வருவதற்குமுன் என்ன செய்து கொண்டிருந்தார்கள்"

"தெரியாது"

"இன்றிரவு உன்னிடம் யாரும் வந்தார்களா?"

இக்கேள்வி, பேச்சோடு பேச்சாக திடீரென்று கேட்டவுடன் அவன் உடம்பு நடுங்கிற்று. இதைஷம்ஸ் அறியாமலில்லை.

" யார் வந்தது ? "

" யாருமில்லை "

" இரவு ஒரு மனிதன் வந்தான் அவன் யார் ? "

" நீங்கள் என்ன கேட்கின்றீர்கள் ? என்று எனக்கு புரியவில்லை. யாரும் வரவில்லை " என்று நடுக்கத்துடன் சொன்னான் மைக்.

உடனே ஷம்ஷ் "நான் வீட்டின் கீழ்புறமும் பார்க்கப் போகின்றேன்" என்று திரும்பினர். மைக் வழியைமறித்துக்கொண்டு, "கீழே யாருமில்லை சத்தியமாக சொல்லுகின்றேன். யாருமில்லை" என்றான். ஷம்ஷ் கொஞ்சநேரம் யோசித்தபின் "அப்படியானல் நான் ஏன் பார்க்கக்கூடாது" "பார்த்துதான் ஆகவேண்டுமென்றால் பாருங்கள். நான்யாரையும் ஒளித்து வைக்கவில்லை" என்று சொல்லி வீட்டின் கீழ் இறங்கினன். ஷம்ஷ் பின்வந்தார். பார்த்தார். எங்கு பார்த்தாலும் தூசிபடிந்திருந்தன. மில்லின் சக்கரங்கள் ஒரு மூலையில் இருந்தன. மைக்குக்கு வேண்டிய ஒன்றிரண்டு மரக்கட்டில் சாமான்கள் இருந்தன. தரை மரத்தால் செய்யப்பட்டிருந்தது. "இந்தத் தரையின் கீழே தண்ணீர்இருக்கிறதா? தண்ணீர் சப்தம் கேட்கிறதே!" எனறார் ஷம்ஷ். மைக் ஷம்ஸை பின்பக்கம் கூப்பிட்டுச் சென்றான். பின் ஒரு கதவைதிறந்ததும் மரத்தால் ஒரு வராண்டா மாதிரி நீளமாக ஆற்றின் மேல் கட்டப்பட்டிருந்தது. அந்த வராண்டாவின் கீழ் மில்லின் தண்ணீர் சக்கரம் சங்கிலியால் கட்டப்பட்டிருந்தது. "தண்ணீர் இதுவரை உண்டு" என்று அங்கிருந்து கையால் சுட்டிக்காண்பித்தான்.

"வெகு தனிமையான இடம். இங்கு ஏன் வந்தாய்?"

"விலை குறைந்த இடம். வசிப்பதற்கு ஏதாவது இடம் வேண்டும் தானே"

"இந்த இடம் யாரைச்சேர்ந்தது?"

மைக் சிறித்துக்கொண்டே "யாரைச் சேர்ந்தது யென்று எனக்கே தெரியாது. குடிக்கூலி ஒன்றும் கொடுப்பதில்லை"

"ஏதோ ஒரு இடம் காலியாக கிடக்கவே, வந்து யிருந்து கொண்டாயா?"

"ஆம்"

"உன்முழு பெயரென்ன?"

"மைக் பிரெட்ரிக்"

"சண்டை பட்டாளத்தினின்றும் யாருமறியாமல் ஓடிவந்து விட்டாயா?"

மைக் கொஞ்சம் தயங்கியபின் "சரியாக சொன்னீர்களே, எப்படி இந்த யோசனை தென்பட்டது" என்று கேட்டான்.

"ஒருவன் சந்நியாசி மாதிரி தனியாக ஒரு வனாந்திரம் போலுள்ள இடத்தில் வசிக்ககாரணம் வேறென்ன யிருக்கலாம். பட்டாளத்தை விட்டு ஓடிவந்தால் இவ்வாறு செய்வது சகஜம். இதைப்பற்றி எனக்கு ஒன்றும் தொந்தாட்சனை கிடையாது. நான் வந்தது டாம் ஜேன் விஷயமாக" என்று சொல்லி, வீட்டினுள் வந்தார்.

வந்தவர் வழியில் நின்று "உனக்கு வெஸ்ட் லேன்ட் பாங்க் தெரியுமா?" என்று கேட்டார்.

"அதைப்போல் பாங்குகள் எத்தனையோ உண்டு" என்றான்.

"இல்லை அந்தப் பெயருடைய பாங்க் ஒன்றுதான் உனக்கு தெரியுமா என்று கேட்டேன்" என்றார்ஷம்ஷ். திடீரென்று "இரவு வந்தவன் யார்?" என்று ஷம்ஷ் மறுமுறை கேட்டார். மைக் தயங்கினான். இனி மறைப்பது வீண் என்றெண்ணி " இதற்கு முன் அவனைப் பார்த்ததில்லை" என்றான் மைக்பிரெட்ரிக். "அவன் பெயர்?"

"பாஸோ"

"பாஸோ வென்று பெயரே கிடையாதே. ஏதோ பொய் பெயர் போல் தோன்றுகிறது. சரி எவ்வாறிருந்தான்? என்ன உடை அணிந்திருந்தான்?"

"கொஞ்சம் பருமனாகயிருந்தான்; உயர்தரமான சூட் அணிந்திருந்தான்"

"அந்த ஸூட்டில் ஏதாவது கரைபட்டிருந்ததா?"

"எனக்கு தெரிந்தவரை கிடையாது. கொஞ்சநாள் இங்கு தங்கப்போவதாக சொல்லி வந்தான். பிறகு இன்றிரவிலேயே போய் விட்டான்."

"திரும்பி வருவானா?"

"இங்கு வந்தகாரணமே எனக்கு தெரியாது? எனக்கு 5 பவுண்ட் நோட் கொடுத்தான்" என்று சொல்லி, தன்மனதிலிருந்த இரகசியத்தை சொல்லி விட்டதால், தன் தலையிலிருந்த கனமான வஸ்துவை இழிறக்கியது போல், பெருமூச்சு விட்டு சந்தோஷமாக

தோன்றலானான். "உங்களுக்கு நான் வரைந்துள்ள படங்களை காண்பிக்க வில்லையே! வாருங்கள்" என்று மூலையிலிருந்து மில்சக் கரங்களுக்கு பக்கத்திலிருந்த கதவைதிறந்து இன்னொரு அறைக்கு கூப்பிட்டுப் போனான்.

அந்த அறையின் ஒரு மூலையில் மில்லின் இன்னொரு சக்கர மிருந்தது. அங்கு மற்ற இடங்களி லெல்லாம் அவன் வரைந்த படங்கள் அநேகமிருந்தன. அவைகளைப்பார்த்தபின் திரும்பி, "நீ டாம் ஜேனைப்பற்றி ஏதாவது விஷயம் ஞாபகம் வந்தால் எனக்கு 33552நெம்பருக்கு டெலிபோன் மூலம் தெரியவை" என்றார்.

"எனக்கு தெரிந்ததை சொல்லி விட்டேன் அவர்களுடன் நான் பழக்கம் வைத்துக் கொள்வதில்லை."

பிறகு ஷம்ஷ் வீட்டினுள் வந்து மறுமுறைபின்பக்கம் மரவராண்டா பக்கம் போனார். ஆற்று தண்ணீர் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. அந்த மில்சக்கரம் சங்கிலியால் கட்டப் பட்டிருப்பதால், தண்ணீர் வேகமாக அடித்தும் சுற்றவழியில்லா மல் கிர் கிர் என்று சப்தம் வந்து கொண்டிருந்தது. அவர் அந்த சக்கரத்தைப் பார்ப்பதுடன் காலை வெயிலினால் தனது நிழலையும் பின்னால் நிற்கும் மைக்கின் நிழலையும் கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தார்.

மைக்குக்கு ஷம்ஸை தொலைக்க வேண்டுமென்ற எண்ணமிருக் கில் அது நல்லதருணம். பின்னால் நின்றபடி ஷம்ஸைதள்ளினால் ஷம்ஸ் தண்ணீரில் மில்சக்கரத்தின் நடுவில் விழுந்து கட்டாயம் தப்பிக்க வழியில்லாமல் இறக்கக்கூடும். அத்தருணத்தை மைக் குக்கு ஷம்ஸ் வேண்டுமென்றே கொடுத்து நிழலைக்கவனித்துக் கொண்டிருந்தார். ஆனால் மைக் தான் நிற்குமிடத்தை விட்டு நகரவில்லை. பின்பு திரும்பி மைக்கைப்பார்த்தார். அவனும் தண்ணீரில் சக்கரத்தின் ஒரு பாகத்தைப் பார்த்தவாறு ஆடாமல் அசையாமல் நின்றான். அவன் கண்கள் எதையோ பார்த்து பயப்படுவது போல் இருந்தன. ஷம்ஸ் தான்நின்றயிடத்திலிருந்து அவன் பார்க்கும் திசையை நோக்கியும் ஒன்றும் தெரியவில்லை. "என்ன விஷயம்?" என்று சொல்லி, அவனருகே வந்து அவன் பார்க்கும் பக்கம் நோக்கினார். மில்சக்கரத்திற்கும் வீட்டு சுவருக்கும் நடுவில் ஒரு மனிதனின் உடல் தெரிந்தது. தலை தண்ணீருக்குள் யிருந்தது. தண்ணீரின் நுரை அவன் மேலெல்லாம் யிருந்தது. "எப்படி அங்கு மாட்டிக் கொண்டான்?" என்று திகைத்து நடு நடுக்கத்துடன் மைக் சொன்னான். (தொடரும்.)

குலாப் ஜான்.

மைதா மாவு ½ படி, சர்க்கரை 1 வீசை, பால் டின் 1 நல்ல நெய் 12½ பலம், ஜாப்ரான் ¼ தோலா, பன்னீர் ¼ ஆழாக்கு, ஆப்பம் சோடாமாவு 1 சிட்டிகை.

மைதாமாவை சுத்தி செய்யவும். சர்க்கரை ¼ வீசையை மாவு போல் தூள் செய்யவும். ஜாப்ரானை பாதி பன்னீரில் (1/8 ஆழாக்கில்) கரைத்துக் கொள்ளவும். காலையில் ஒரு பாத்திரத்தில் சுத்தி செய்த மைதாமாவு, தூள் செய்த சர்க்கரை, ஜாப்ரான் கறைத்த பன்னீர், நெய் 2½ பலம், பால், ஆப்பம் சோடா மாவு இவ்வளவையும் போட்டு நன்றாக பிசையவும். பின்பு அதை அப்படியே ஊர வைத்து சாயுங்காலம் எடுத்து மறுபடியும் நன்றாக பிசைந்து, சிறு பலா கொட்டை யளவுகளாக திரட்டி 10 பலம் நெய்யில் பொறித்து வைக்கவும். ¾ வீசை சர்க்கரையை ஜீரா காய்ச்சி அதில் 1/8 ஆழாக்கு பன்னீரை விட்டு, அதில் ஷெ பொறித்ததை போட்டு வைத்துக் கொள்ளவும். இது தான் முதல் தரமான குலாப் ஜான்.

(மாவை நன்றாக குழைக்கா விட்டால், பொரிக்கும்போது தூள் தூளாகி கறிந்து விடும்.)

சிறு கதை.

வயதான கிழவன் தனது சக்கிரம் வைத்த நாற்காலியிலேயே இருப்பவன் வேட்டைக்கு போக வேண்டுமென்று ஆசைப் பட்டான். ஒருநாள் தனது மூன்று பேரப்பிள்ளைகளாகிய சிறு பையன்களை (அவர்களின் தாயார் வீட்டிலிருந்து வெளியே போயிருந்தபோது) தன்னை காட்டு பக்கம் சக்கர நாற்காலியுடன் தள்ளிக் கொண்டு போக தூண்டினான். கிழவனை துப்பாக்கியுடன் மூன்று பேரபிள்ளைகளும் காட்டுப் பக்கமாக வேட்டைக்கு தள்ளிக் கொண்டு போனார்கள். காட்டினுள் அவரை தள்ளிக் கொண்டு போகும் போது அங்கு ஒரு மரத்திற்கு பின்னிருந்து ஒரு கரடி தனது தலையை நீட்டியது. உடனே மூன்று பேரபிள்ளைகளும் சப்தம் போட்டுக் கொண்டு கிழவனை காட்டிலேயே விட்டு விட்டு வீட்டை நோக்கி ஓடிப் போனார்கள்

பேசமுடியாத அளவு மூச்சு விட்டுக் கொண்டு "அம்மா, பாட்டனை கரடி தின்று விட்டது!" என்றார்கள்.

அதற்கு அவள், "வீணாக சப்தம் போடாதீர்கள். உங்கள் பாட்டன் 5 நிமிஷத்திற்கு முன்னாலேயே வந்து விட்டாரே" என்றாள்.

இதய தாகம்!

(வேளாங்கன்னி, சாந்திதாஸன்)

தாஜுதீனின் வாழ்க்கையிலே தவிர்க்க முடியாத தளர்ச்சியொன்று குறுக்கிட்டதைப்பற்றிய பிரச்சனை அந்த வட்டாரத்திலேயே முதன்மையான விளம்பரமாக அடிப்பட்டுக்கொண்டிருந்தது. ஆம்...ஏழ்மையிலே இடரிவீழ்ந்து—எண்ணத்துலையாத இன்னல்களுக் கிடையே போராடி! சூழ்நிலையை செம்மை யுறச் செய்ய அவன் முயன்று பார்த்த முடிவனைத்தும் வியர்த்தமாயின. ஆதிக்க வெறிக்கு அடிபணியும் ஆராதனை! பொருள்படைத்தோர்க்கு பக்கபலமாக பல்லிளிக்கும் பண்பு! உழைப்போரின உதிரத்தை உறுஞ்ச உறுமாறும் ஓர்வித உள்ளன்பு! ஏமாற்றி, இயன்ற வரையில் எதையும் பறிக்கும் எதிர்கால எத்துப்பயிற்சி! இவற்றில ஒருவகையேனும் கண்டறியாத அவனது இளம் இதயம் இயந்திரம் போன்று எங்கோ ஏகிக்கொண்டிருந்தது. ஜீவக்களை என்றும் பொன்றிராத அவனது முகத்திலே அன்று ஏனோ ஆகுலரேகை அடர்ந்து நின்றது.

இந்நிலையிலே திடீரென அவனது சிந்தனைக்கு சிறிது இடம் கிடைக்கத்தான் செய்தது. எதையோ எடைப்போட்டுப் பார்த்து விட்டவனாக துள்ளி எழுந்தான் உடனே தனது "ஷர்ட்பாக்கெட்"டிலிருந்த போஸ்ட் கவர் ஒன்றை எடுத்து பரபரப்புடன் பிரித்து அதனுள் அடங்கிய வெண்மையான நிருபத்தைக் கண்ணுற்றான்.

அன்புள்ள தாஜ்!

நின் ஆழ்ந்த நன்றி உரித்தாகட்டும்!

இன்று இப்பொழுது, தங்களின் தூய்மையான தன்மான மன்றத்தின் நடுவிலே நான் ஒரு துரோகியாகவே காட்சியளிக்கின்றேன். அன்று நம்மிடையே தீண்டுதலற்று திவ்ய நட்பாலே! பரந்த நிலா ஒளியிலே பக்திவான்களை பரமானந்தத்திலாழ்த்தும் பரிசுத்தமான பண்டிகையாம் ஹஜ்ஜுப் பெருநாளின் இரவிலே எனது படிப்பக அறையிலே பன்னுறுதிதந்தே தங்கள் பாரியாளாய் பரிணமிப்பேன் நான் என்று! இன்று தரா தர தாரசிலே எனது தாய், தந்தையர்களின் கட்டாயமுடிவிலே எங்கோ காமுகன் ஒருவனின் காதலியாக பலியாகப் போகின்றேன். கண்ணுற்று, களிப்பெய்துவதற்குப் பகரமாக கொதிப்பேறிய தங்களின் உள்ளத்தின் உணர்ச்சிக் கண்ணீரையேனும் இன்னும் இரண்டு தினங்களிலே

நிகழவிருக்கும் அந்த குதூகல விழாவிலே வந்திருந்து காணிக்கையாக கொட்டிவிட்டுப் போங்கள். இறுதி விடை பெற்றுக் கொள்கிறேன்.

இங்ஙனம்
தங்கள் துரோகி
ஜலீலா!

அந்நிருபத்திலே அமையப்பெற்றிருந்த விஷயவிளக்கம் இவ்வளவுதான். மீண்டும் அந்த நிருபம் தாஜுத்தீனின் "ஷர்ட்பாக்கெட்"டினுள்ளே சாவதானமாக சரணடைந்து விட்டது. அவனது இரு கண்களின் வழியாக களங்கநீர் மல்கி தங்குந்தடையின்றி தாரை தாரைகளாக தரையிலே வழிந்தோடின. அதை தொடர்ந்து அவனது அதரங்களும் மெள்ள இம்மாதிரி அசைய ஆரம்பித்து விட்டன.

பெண்களுரிமைப் பேசப்படுகிறது பிரசங்கமேடைகளிலே! மறுமணம் என்று முழக்கப்படுகிறது மதாபிமானிகள் முன்னிலையிலே! சீர்திருத்தம் என்று சொல்லப்படுகிறது. இரவில் சிங்காரிகளுடன் சரச சல்லாப சயன அறைகளிலே! காருண்யம் என்று கர்ஜிக்கப்படுகிறது, கள்ளமார்க்கட்டில் கொள்ளையிடும் கொள்கையின் பெயராலே! என்ன உலகம்! எங்கே நியாயம்!! பணத்திற்கு பாவையர்கள் பலியா? படிப்பகத்திலே பாசத்தினூடே பழகிவந்த என்போன்ற பால்யர்களுக்கு பகுத்தறிவின் பிரேரேபனை படுகுழியா?

இன்றைக்கு சுமார் ஆயிரத்தி முன்னூறு ஆண்டுகளுக்கு அப்பால் வாழ்ந்து மறைந்த அறிவிலிகள் இதைபோற்றிப் புகழ்ந்திருக்கலாம். இந்த இருபதாம் நூற்றாண்டின் மத்தியிலே இமியளவேனும் எங்கோன் நபி (ஸல்) அவர்கள் இயம்பியுள்ள பொன்னேடுகளிலே எத்தகைய வரையறைகளும் மாற்றமாக தோற்றங் கொண்டிருக்கவில்லை.

இன்னும் இரண்டு தினங்களில் என் இதயராணி ஜலீலாவுக்கு மணம்! சமூகமென்னும் சற்பத்தின் வாயிலே அந்த வனிதை என்னும் வைரத்தை வைத்து நேற்றுவரையில் கார்த்துவந்தேன், நீங்காத ஆபரணமாக அணிந்துக் கொள்ள! என்ன துணிச்சல்? சற்பத்தை சங்காரம் செய்து அந்த அழகுச்சுடர் மிளிரும் வனிதை என்னும் வைரத்தையும் எடுத்து, விரும்பும் வியாபாரி ஒருவனுக்கு விற்பனையா? இப்பொழுது அந்த பணத்தாசைப்படைத்த வெறியர்களை பிணமாக வஞ்சம் தீர்க்காவிடில் என்போன்ற ஏழைகளுக்கு இஞ்சிற்றும் இங்கு இடமில்லை.

தாஜுத்தீனின் இத்தகைய விரகதாப இதய எதிரொலிக்கு பக்கபலன் பயக்குகிறேன் என்று பகர்வதைப் போன்று பக்கத்து சுவற்றில் பதித்திருந்த "அமெரிக்கன் பழைய அலாரமும்" மாலை ஐந்து மணிகளால் அலறி ஆரவாரம் செய்தது. சதியாலோசனை திட்டமும் சமயம் பார்த்து அவனது சீற்றத்தின் சிகரத்தை கெட்டியாக எட்டிப்பிடித்து இரண்டறக்கலந்து விட்டது. பற்களை நர நரவென்று கடித்தவாறு பாய்ந்து வெளியில் வந்தான்.

அப்பொழுதுதான் அங்கு நிகழ்ந்த எதிர்ப்பாராத ஒரு சிறு காட்சி சூழ்நிலையின் சோதனையாக அவனை மாந்தரில் மிகவும் ஏந்தல் பெறத்தக்க ஒரு மாசற்ற மாணிக்கமாக மாற்றியமைத்து விட்டது. ஆத்திரம் மேலிட்டு ஓடி வந்த தாஜுத்தீன் அங்கு அடைந்த நேர்மையான நேத்திரம் வேறொன்றுமல்ல. தாழ்வாரத் தின் ஒரு மூலையிலே ஆயிரம் ஒட்டுகளுடன் கூடிய ஒரு வெண்மை யான ஆடையால் அங்கம் முழுவதையும் ஒழுங்குற போர்த்திக் கொண்டு (அஸர் தொழுகையை) இறைவன் வணக் கத்தை அக மகிழ்வோடு இனிது நிறைவேற்றிவிட்டு திரிகரண சுத்தியாய் ஐம்புலன்களையும் அவனது சமூகம் அணுகச்செய்து அடுத்துவரவேண்டிய "மஃரிப்தொழுகையினை" எதிர்நோக்கிய வாறு அந்த பழைய பாயிலேயே பக்தி சுரக்க வீற்று தனிமையை இனிமையாக்கி கலைஞானப் பொக்கிஷமாகிய திருமறையாம் "குர் ஆன் ஷரீப்"பை தனக்கே உரித்தான தத்துவ தொனியிலே அவனது அன்பின் சொருபமாகிய அன்னையார் ஆத்திஹா ஓதிக்கொண்டி ருந்தார்.

அவ்வமயம் "அத்துன்யா ஷாஅதுன்—லெய்ஸபீஹா ருஹு துன்" என்னும் இறைவனின் எச்சரிக்கையின் எடுத்துக் காட்டு அந்த அம்மையாரின் அதரங்களிலிருந்து சோகரஸத்தினூடே சுருதிக் கூட்டவே, இவ்விரண்டு வரிகளும் குறிப்பாக இளைஞன் தாஜுத்தீனின் இதயத்தை இருப்பிடமாக இணைத்துக் கொண்ட சீற்றத்தின் சிகரத்தை சுக்கு நூறாக சிதைத்து வீழ்த்தியது. சீ ....வாழத்தெரியா கோழை நான்! எத்தகைய இழிவான முடி வுக்கு சற்றுநேரத்தில் இலக்காகிவிட்டேன்? உலகப்படகின் உவகை யும், உல்லாசமும் ஒரு நிமிடமே! என்று வல்லவனே விளக்கம் செய்துள்ளான். கற்றுணர்ந்தும் சுயமைத்தனம் எனது கண்களை குருடாக்கி விட்டது. இறைவா! இத்தவறை பொருத்துக்கொண்டு இனியேனும் எனக்கு ஈடேற்ற மருள்வாயாக! இத்தகைய இதமான பிரார்த்தனை ஒருவித உணர்ச்சியால் உந்தப்பட்டு பகிரங்கமாகவே அவனது நாவிலிருந்து பக்தியின் பாசறையாகப் பிரதிபலித்தது. அடுத்தகணம் அன்னையாரின் இருகால்களையும் அன்புற கட்டித் தழுவியவாறு அந்தோ அன்னையே! மிருகச் செயலில் மூழ்ந்து

விட்டமூடனாகிய எனக்கு மிருதுவான தங்கள் தொனியிலிருந்து வெளிப்போந்த தூயத்திருமறையின் அந்த அப்பட்டமான அரிய வசனத்தின் அரவணைப்பால் எனது அகக்கண்கள் இன்றே ஆத்ம சக்திக்கு அடிகோலிவிட்டன. அதற்காக என்றென்றும் தங்களுக்கு நன்றி நவில கடமைப்பட்டுள்ளேன் யென்று கண்ணீர் சொரிந்த வண்ணம் கதறினான்.

தனயனின் தாளாத இத்தகைய ஓலத்தைக் கண்ணுற்ற ஆத்திஹா தன் நிலைத்தளர்ந்து, செல்வா! உனக்கு நேர்ந்ததென்ன? இறைவனே ஏற்கமுடியாத அளவுக்கு என்ன குற்றம் புரிந்தாய்? என்று அவனை அணைத்துப் பிடித்தவாறு அமைதியாக பதிலிறுத்தார். தாயே! என் ஜலீலாவை வேற்றானுக்கு விலைக்கோரும் ஜென்மவிரோதிகளை வெட்டி வீழ்த்த திட்டம் தீட்டினேன். அவ்வளவுதான்!

இதைசெவிமடுத்த ஆத்திஹா அலறித் துடித்தவராக—தாஜ்! தீராலோசனை செய்து பார்!! மனித சுபாவத்திற்கே மாசு கற்பிக்கும் அளவுக்கு உன்மதி சதி செய்திருக்கிறது. பாதகர்களின் பரம்பரை யல்ல நாம்; படித்து, பாண்டித்தியம் பெற்ற ஒரு பிரபல ஆலிம் ஸாஹிபுவின் புதல்வன் நீ. இஸ்லாத்திலே வெறும் இச்சை தவிர்ப்பதற்கான கருவிகளாக எழிலரசிகளை இடம் பெறச் செய்யவில்லை. சொல்லிலே, செயலிலே, கடமைப்பணியிலே, தங்கள்—தங்கள் சொந்த சகோதரிகளாக சுதந்திரம் கொண்டாடும் அளவுக்குத் தான் உரிமை யளிக்கப்பட்டிருக்கின்றன. உனது பாப எண்ணத்திற்கு பிராயச் சித்தமாக நாள்தோறும் நிலையாக ஐங்காலமும் கஃபாவை நோக்கி கனிந்துருகுவாயாக! என்ற தேற்றுரையோடு அவனது அன்னையாரை "மஃரிப் தொழுகை" மகிழ்ச்சியோடு வரவேற்றது.

அந்த நத்தம்பட்டிக் கிராமத்திலேயே "முஹம்மது நஸீருத்தீன் ஆலிம் ஸாஹிப்" என்றால் "மேதைகளின் முன்னணிச் செல்வர்" என்று தானாகவே ஏக மனதாக அங்கு வசிக்கும் மக்களின் நாவுகள் புகழ்மாலை சூட்டும். அராபி, பார்ஸி, உர்து முதலிய பாஷைகளில் அதிகம் பாண்டித்தியம் பெற்ற கலாவல்லுணர். மேலும் ஆங்கிலத்திலும் ஓரளவு புலமை யுண்டு! அவரது இல்லறவானிலே என்றென்றும் "எளிமை என்னும் தாரகைகள்" தோன்றிக் கொண்டிருப்பினும், "மதப்பிரச்சார மகோனதப் போதகர்" என்ற முறையிலே மக்கள் வர்க்கத்தின் "மதிப்பென்னும் மேகங்கள் சூழ்ந்து ஆதரவென்னும் மழைகள் அவர் பால்வருஷித்துக்கொண்டே யிருந்தன. காலக்காற்றாடியும் கனவேகமாக சுழன்றுக்கொண்டிருந்தது. தாஜுத்தீனும் அவதரித்தான். அவனது

அவதாரத்தின் எடுத்துக் காட்டாக உடல் நலம் குன்றி ஆலிம் ஸாஹிபும் படுக்கையில் வீழ்ந்து விட்டார். தன் பெயர் தழைத் தோங்க பிறந்த ஏக புதல்வனை தூக்கி கொஞ்ச வேண்டிய அவர் எதிர்பாராத சூழ்நிலையாக பயங்கர ஜன்னிக்குப்பலியாகி ஏதேதோ புலம்பிக்கொண்டு படுத்திருந்தார். அவ்வமயத்திலே மழலை தாஜுதீனை மனம் கொண்டமட்டில் திட்டாத தாய்மார்களே அந்த வட்டாரத்தில் இல்லை என்று சொல்லிவிடலாம். ஊரார்களின் உதவியால் ஆலிம் ஸாஹிபுவை அமரலோக வாயலிலிருந்து மீட்க வைத்திய சிகிட்ஸைகளும், மருந்து, மூலிகைகளும் வரிசைக்கிரமமாக நடந்துக் கொண்டே யிருந்தன. எனினும் இறைவனும் ஆலிம் ஸாஹிபை இவ்வுலகிலே இருக்கச் செய்யும் எண்ணத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமல்லவா? அதுதான் இல்லை. செய்த சேவை போதுமென்று சிலகாலத்திற்குள் அன்னவரை தன் பக்கம் அழைத்துக் கொண்டான். அந்தோ பரிதாபம்..........!

தந்தையை தூக்கி விழுங்க வந்த தறுதலை.......மாணிக்கத்தை மண்ணிலே புதைத்து விட்ட மூதேவி.......கொஞ்சிக் குலாவ கொடுத்து வைக்காத அனுதை.......இப்படி எல்லாம் அங்குள்ள ஐதீக அம்மையார்கள் அனுதினமும் அனுதாபத்தினூடே தொடுத்து வந்த ஆலாபன வசைவு கீதங்களுக்கிடையே எப்படியோ, தாஜுதீனும் ஏழு வயதை எட்டிப்பிடித்து விட்டான். திக்கெதியாய் விடப்பட்ட இளம் விதவை ஆத்திஹாவும் வம்ச வழிக்கு அழுக்காறு ஏற்படக்கூடாது என்ற நோக்கத்திலே அங்குள்ள "அரபி கலாசாலையில்" அவனை பொறுப்பு உணர்ச்சியாக ஒப்புவித்தார். பருவத்தின் படிகளை ஒன்றன்பின் ஒன்ருக தாண்டிக் கொண்டிருந்த தாஜுதீனும் "விளையும் பயிர் முளையிலே" என்னும் மூதுரைகேற்ப நுண்ணிய அறிவாளனுக திகழ்ந்தான். அவ்வமயத்தில் தான் அதே கலாசாலையில் அவனுடன் சரிசமபாடத்தில் போட்டி போட்டுபின் தொடர்ந்து வந்துக் கொண்டிருந்த அவ்வூர் மூத்துவல்லியின் புதல்வி எழிலரசி ஜலீலாவின் அன்பு அவனை ஆட்கொண்டது. கலாசாலைக்கு ஏக அவளது இல்லத்திற்கு இவன் சென்று அழைப்பதும், இவனது இல்லத்திற்கு அவள் சென்று அழைப்பதும் சர்வ சாதாரண மாகிவிட்டது. இது விஷயத்தில் தாஜுதீனின் பெற்ருேர்களோ, அல்லது ஜலீலாவின் பெற்ருேர்களோ விதற்பமாக எண்ணவில்லை. ஏனெனில், குழந்தைகளின் கூட்டுறவு என்று குதூகலமாகவே இருந்தார்கள். இறுதியில் பள்ளியின் பந்த பாசம் அந்த இருவரிடையே பருவத்தின் முறுக்கேறிய காதலாக உறுவெடுத்து பரிணமிக்கத் தொடங்கி விட்டது. இத்தகைய சந்தர்ப்பத்திலே தாஜுதீனும் ஒரு மௌலவியாக மாருவிடினும், பல மேலைதகளை அடுத்து சில முக்கிய விஷய ஞானங்

களை கற்று, பிரபல பேச்சாளனாக தாயகத்திலேயே தங்கியிருந்துக் கொண்டு அவற்றின் வாயிலாக சிறிது வறுவாய் அடைந்தவாறு தன் அன்னையாரையும் காப்பாற்றி வந்தான்.

அன்று ஹஜ்ஜுப் பெருநாள் இரவு: விடிந்தால் ஏகத்துவக் கொள்கையினை எதலமெங்கிலும் ஒருசலனப்பட காட்சியைப் போன்று எடுத்துக் காட்டி அறிவுறுத்தும் இன்றியமையாத சாதனை நாள்! அவற்றின் முதற் பரிசாக முத்தவல்லியின் மூன்றடுக்கு மாளிகையிலே ஜலீலாவின் மனமுவந்த உரையாடல் பேட்டி கிடைத்தது ஏழை தாஜுத்தீனுக்கு. அப்பொழுது தான் தங்கள் பாரியாளாகுவேன்! என்று ஜலீலாவின் பன்னுறுதியும், ஐம்பது ரூபாய் ரொக்கமும் அவனை ஆர்வம் தவழ அணுகி வந்தன. உள்ளூற மகிழ்ந்து துள்ளி வெளியேறினான் தாஜுத்தீன். அந்த சந்தேகத்தின் பிராப்தமே மூன்று ஆண்டுகள் வரையில் முன்னேற்பாடாக இளம் காதலர்கள் அவ்விருவருக்கும் நடுவிலே இரும்புத் திரை இடப்பட்டது முத்தவல்லியால்.

அடுத்த அத்தியாயம் தான் முத்தியால் பேட்டை "முன்சீப்" முத்து முஹம்மது ராவுத்தரின் புதல்வன் ஜமால் முஹம்மதுக்கு ஜலீலாவை கட்டாய நிர்பந்த திருமணம் உரிமையாக்கப் பட்டது, பணம் என்ற மூன்றெழுத்து முகவுரையைக் காட்டி!

அவரிடத்திலே வாதாடும் சக்தியேது அருகதையற்ற அந்தஸ்திலிருக்கும் இளைஞன் தாஜுத்தீனுக்கு? முத்தவல்லி மூயீனுத்தீன் என்றாலோ முன்கோபியாயிற்றே என்று ஒரு சிறுவனும் முடிவுரை கூறுவானே!

கல்யாண காலமும் குறுகி விட்டது முத்தவல்லியின் இல்லத்திலே மும்முரமான ஜனத்திரள், விருந்துண்ணுவோர்களும், வாழ்த்துரை வழங்குவோர்களும் அனந்தம்பேர்! மண மன்றத்தின் நடுவிலே திடுமென தாஜுத்தீன் தோன்றினான்.

சகோதரப் பெரியோர்களே! மற்றுமுள்ள இளைஞர்களே! திருமணத் தம்பதிகளே!!! அஸ்ஸலாமு அலைக்கும்!

அழையா வீட்டிற்கு நுழைந்த விருந்தினனல்ல நான். அறிஞர்கள் குழுமியுள்ள இந்த "திருமண மன்றத்திலே" அப்பட்டமாக ஒரு சில சந்தேகங்களை நிவர்த்தி செய்து தம்பதிகளின் வாழ்வு விழா வளம்பெற நல்லாசி விழையவே இங்கு வந்துள்ளேன்.

குறிப்பாக— இவ்வூர் வாசிகள் என்னளவிலே ஏளனக் கண்ணோட்டம் புரிந்தார்கள் ஒருவமயம். பலவித அவதூரான வார்த்தைகளுக்கு என்னை பலியாக்கப் பார்த்தார்கள். இதோ வீற்றிருக்

கும் மதிப்பிற்குரிய முத்தவல்லி அவர்களும் எனது மாணவ காலத்திலே இன்று மணப் பெண்ணாக மாறிவிட்ட அவர்களது மகள் ஜலீலாவுடன் அன்பு வைத்ததற்காக மாசு கற்பிக்க முனையவில்லை. எனினும், அத்தகைய குறுகிய மனப்பான்மைதான் இந்த அவசரத் திருமணம்!

இங்கு நான் பேசவில்லை, எனது பரிசுத்த நெஞ்சுறுதி நேர்மைக்காக போராடுகிறது! அன்றொருநாள் ஜலீலாவைக் காதலித்தேன். ஆனால் கைக்கலப்பில்லை! இஸ்லாத்தின் இலட்சியப் பாதையிலே வெறும் இச்சையைத் தணிக்கும் ஒரு கேவலக் கருவிகளாக எழிலரசிகளை இடம்பெறச் செய்யவில்லை. உரிமையாக உறுதுணையாக்கப்பட்ட உத்தமி ஒருவரைத் தவிர, மற்ற மாதரசிகள் அனைவரும் உடன் பிறந்த சகோதரிகளே ஆவர்.

உண்மையிலேயே ஜலீலா அன்றிலிருந்து இன்றுவரையில் எனது அன்பு தங்கையேயாகும். இதோ இப்பொழுதும் எனது தங்கையும், அவளது கணவரும் தழைத்து வாழ தயாபரனிடம் இறைஞ்சுகிறேன். மாசுகற்பிக்கும் மாந்தருக்கு இறைவனின் எச்சரிக்கையை எண்ணிப் பாருங்கள். "லாயஃகிலுல் ஜன்னத—கம்மாவுன்" இழுக்காலும், புறம்பேசுதலுமுடையவர்களுக்கு என் சமூகத்திலே நிட்சயமாக சுவனபதியே கிடையாது என்பதாகும். பணத்தை நம்பி குணத்தோரை குற்றம் கூறவேண்டாம்! இப்பொழுதாகிலும் என்னை நிரபராதியாக ஏற்றுக் கொள்ள உங்கள் மனம் இரும்பாகிவிட்டதா? தாஜுதீனின் உள்ளத்தனல் கொழுந்து விட்டெறிந்தது. மண அவையிலே அமைதி தாண்டவ மாடியது. தாஜுதீன்! நீ தத்துவ தியாகி என்பதை அறியாமல் தவறிவிட்டேன் என்று அவனை கட்டி யணைத்து கண்ணீர் உகுத்த முத்தவல்லி, என்னை மன்னித்துவிடு என்று முடித்தார்! அவையோரும் அவனை அதிகமதிகம் பாராட்டினர். அழுகையோடு கலந்து அண்ணா! என்றொரு குரல் அமைதியாக எதிரொலித்தது. இப்பொழுது தான் என் இதய தாகம் தீர்ந்தது தங்கையே! என்று உரத்துக் கூறிவிட்டு இரத்தக் கண்ணீர் சிந்தியவாறு வெறி பிடித்தவன் போன்று வெளியேறினான் தியாகி தாஜுதீன்

தெய்வீகக் காதல்.

(மாஸ்டர் கமல் பாபு)

(தொடர் கதை 2–வது பகுதி)

"என்ன காஜா அக்கா ஏதாகிலும் சொன்னாளா?"

"வண்டி கொண்டு வந்திருக்கிறேன். ஆபா உங்களை கூப்பிட்டு வரச் சொன்னா"

"எதற்காக?"

"அம்மா எல்லாம் அத்தைவீட்டுக்கு போய் விட்டாங்கோ, ஆபா மட்டும் தனியா இருக்கு அதனாலே கூப்பிட்டு வரச்சொன்னா."

என் மனமும் ஒரு மாதிரியாக இருந்ததாலும் ரஜாக் பாஷாவை பற்றி இதரவிஷயங்கள் அவளுக்கு தெரிந்திருந்தால் அவள் மூலமாய் தெரிந்துக் கொள்ளலா மென்ற ஆசையாலும் அம்மா இடம் சொல்லிவிட்டு இர்ஷாத் பேகம் வீட்டுக்குவந்தேன். நான் வீட்டிற்குள் நுழையும்போது அவள் ஏதோ ஒரு பெரிய பொட்டலத்தை பிரித்துக்கொண்டிருந்தாள். என்னைபார்த்ததும், "வா ஹபீப், நாளை தடபுடலாக செய்யவேண்டு மென்று ராத்திரி சொன்னாயே, அதனால் பாக்கிஸ்தானிலிருந்து உனக்காக, ரஸ்கோலே ராஹத் திவான்ஸ்வீட் பாதம் பர்கி, பாகிஸ்தான் பர்பி, தில்ஷாத்புருட், எல்லாம் தருவித்திருக்கிறேன்." சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டு ஒவ்வொன்றாக எடுத்து வைத்தாள். நான் அவள் பக்கத்தில்போய் உட்கார்ந்து ரஸ்கோலே ராஹத் வாயில்போட்டபடியே அவளை கேட்டேன்.

"இர்ஷாத், இதுகள் எல்லாம் பாகிஸ்தானிலிருந்து வந்ததா யார் கொண்டுவந்தது?"

"டாக்காவிலிருந்து என் அத்தையின் மூத்த மகன் முஹம்மத் கவுஸ் வந்தார்."

"போய் ஒருமாதம்கூடே ஆகவில்லையே அதற்குள் ஏன் வந்து விட்டார்?"

"வாணியம்பாடியிலிருக்கும் அவருடைய சிநேகிதர் தம்பி அப்துற் ரஹ்மான் என்பவருக்கு ஷம்ஷுன்ஹாரை கேட்டார்களாம்."

"உன் காதலர் தங்கை ஷம்ஷுன்ஹாரையா?" இடைமறித்து கேட்டுகொண்டே பாதம் பர்கியை என்வாய்குள் திணித்துவிட்டு தில்ஷாத்புருட் ஒன்றை எடுத்து உரிக்க தொடங்கினேன்.

"ஆமாடி தெரியாதவள்போல் கேட்டு கொண்டு இருப்பே, இன்று பிள்ளை வீட்டாரும் பெண் பார்க்க வருகிறார்களாம்."

"அப்படியானல் உனக்குயோகம்தான். நேற்று காதலன்பிரிந்த கவலையெல்லாம் இன்று காற்றுடன் கலந்து போய் இருக்கும்."

"அத்தைமகனைப் பார்க்கவந்தா எனக்கென்னடி யோகம்!"

"ஷம்ஷுன்ஹார் திருமணம் முடிவுஆகிவிட்டால் உன்திருமணம் நடந்த மதிரிதானே. அவளுக்கு மணமாகவில்லை என்ற காரணத்தினல்தானே உன் திருமணம் தடைபட்டிருப்பது.?"

"மட்டை குடிசை கட்ட பணமில்லாதவன் மாடிவீட்டுக்கு பிளான் போட்டமாதிரி. இன்னும் பெண்பார்க்க வில்லை. பேச்சு ஏதும் நடக்க வில்லை. இதற்குள் பிளான் எல்லாம் போடுகிறாயே." இதை சொல்லிவிட்டு கடைசிமூறையாக திவான்ஸ்வீடை வாயில் போட்டுக்கொண்டு கை அலம்பினள். நானும் கடைசியாக பாகிஸ்தான் பர்பியை வாயில்போட்டுவிட்டு கை அலமபி கொண்டே சொன்னேன்:

"இன்றுதான் பெண்பார்க்க வருகிறார்கள் என்றாயே அற்குள் மறந்து விட்டாயா?"

"பெண்ணைபார்த்து பிள்ளை வீட்டாருக்கு பிடித்தபின்பல்லவா அந்த பேச்சுகள் எல்லாம்."

"முடியாத காரியமா இருந்தா டாக்காவிலிருந்து முஹம்மத் கவுஸ் வருவாரா? அதெல்லாம் போகட்டும் பிள்ளை வீட்டாருக்கு ஷம்ஷுன்ஹாரை பிடித்திருந்து அவள் கல்யாணத்தில் உன் அத்தை திட்டம் போட்டபடி உனக்கும் முஹம்மத் யூஸுபுக்கும் கல்யாணமானல் எனக்கு என்ன பரிசுகொடுப்பாய்?"

"நீ சொல்லியபடி எனக்கு மணம்ஆகிவிட்டால் மறுவருஷமே ஒரு மகனை பெற்றுக்கொடுக்கிறேன். நீயும் சிக்கிரமாக மணம் செய்துக்கொண்டு ஒரு மகளை பெற்றுகொடு. இருவருக்கும் மணம் செய்து நாம் சம்மந்திமுறையில் சந்தோஷமாக பார்த்துக்கொண்டிருக்கலாம்" என்று சொல்லிவிட்டு எக்காளமிட்டு சிரிக்க ஆரம்பித்தாள். நானும் அவளுடன் சேர்ந்து சிரித்தேன். இதுவரையில் பேசாமல் சாப்பிட்டு கொண்டிருந்த அவள் தம்பி காஜாவும் நம்முடன் சேர்ந்து சிரித்து விட்டு, ஆபா நான் அத்தை வீட்டுக்கு போகிரேனென்று எழுந்தான்.

"போய் பனிரண்டு மணிக்கெல்லாம் சாப்பாடு கொண்டுவா." என்ற கட்டளையிட்டு அனுப்பினள் இர்ஷாத்.

நான் ரஜாக்பாக்ஷாவை பற்றி எப்படி கேட்பது என்று சிந்தனை உலகில் மவுனம் சாதித்தேன். கல்ல வேளையாக அவளே ஏதோ மறந்துவிட்டது ஞாபகத்திற்கு வந்தவள்போல்

“நேற்று ரஜாக்பாக்ஷாவின் கதையை படித்தியா?” என்று அவசரமாக கேட்டாள்.

“படித்தேன்” சுருக்கமாக பதில் சொன்னேன்.

“எப்படி இருந்தது?”

“கதைபோல.”

“கதையைபோல என்னடி? கதையேதானது. ஷெஹ்னுஜ் வேதனை பற்றி விமர்சனம் செய்யமுடியுமா?” என்று கேட்டாள்

அவள் பேச்சை முடிப்பதற்குள் நான் சொன்னேன். “விமர்சனம் செய்து பழக்கமில்லை. அவருக்கு எத்தனை சகோதரர் எத்தனை சகோதிரிகள். அவர்கள் பெயர் உனக்கு தெரியுமா?”

“நீ யாரை காதலித்தாயோ எனக்கென்னடி தெரியும்?”

“கேள்விக்கு பதில் சொல்லடி என்றால் கிண்டல் செய்கிறுயே.”

“பேர் ஊர் இல்லாமல் அவருக்கு என்றால் நான் எவருக்குனு நினைப்பது?”

“காதலியின் வேதனை என்ற கதை எழுதிய காண்டிபருக்கு, இப்பவும் புரிக்ததா இல்லையா?”

“அந்தகதை மூலியமாகவே அவர் உன் கழுத்தில் தாலிகட்டிவிட்டாரா என்ன? பத்துபேர் அறிய பூ மாலையிட்ட புருஷன் மாதிரி பெயரை சொல்லாமல் காண்டிபர் கிண்டிபர் என்று.”

“இர்ஷாத்! கேட்ட கேள்விக்கு சரிவரபதில் சொன்னல் சொல்லு இல்லாவிட்டால் சும்மாயிரு, அனுவசியமான வார்த்தைகள் எல்லாம் சொல்லாதே.” “இதை சொல்லிவிட்டு கோபப் பார்வையில் என் முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டேன். ஆனல் என் மனம் மட்டும் அவள் பக்கமே பதிலை ஆவலுடன் எதிர்பார்த்து நின்றது.

“அதற்குள் கோபித்துக்கொண்டாயா, நான் ஒருவள் செய்யும் வேடிக்கைக்கு கோபித்துக் கொண்டாய், சிநேகிதிகளெல்லாம் சேர்ந்து வேடிக்கை செய்வார்களே, அப்போ எப்படி கோபிக்கிறுய் என்று பார்க்கிறேன் இந்தப் பக்கம் திரும்பு, உன்கேள்விக்கு உண்மையாக பதில் சொல்லுகிறேன்” என்று என் முகத்தை தன் பக்கம் திருப்பினுள். நானும் அவள் சொல்வதைகேட்க ஆசையுடன் திரும்பினேன். அவள் சொன்னுள் “உன் வீட்டில், நஜ்முன்

னிஸா, கமருன்னிஸா, ஹபிபுன்னிஸா, ஜன்னத்துன்னிஸா, ரவுணக்குன்னிஸா, என்று ஐந்து சகோதரிகள் இருப்பது போலவே, அவர் வீட்டிலும், ஜமீலாபானு, கலிலாபானு, ஹமிதாபானு, ஸயீதாபானு, அகிலாபானு என்ற ஐந்து சகோதரிகளும், அப்துல் ஷுகூர், அப்துல்ஸமத் என்று உன் வீட்டில் இருப்பதுபோலவே, ரஜாக்பாஷா, ரஹ்பர்பாஷா என்ற இருசகோதரர்கள் இருக்கிறார்கள்.”

“அவர் எத்தனை பாரம் படித்திருக்கிறாரென்று உனக்கு தெரியுமா?”

“ஓ தெரியுமே, சொல்லுகிறேன் விரலை விட்டு எண்ணிக் கொண்டேவா, அப்ளிகேஷன் பாரம், மணியார்டர் பாரம், டெலிகிராம் பாரம், அக்னாலட்ஜ்மெண்ட் பாரம், வி. பி. பாரம், சர்டிபிகேட் பாரம்.”

“இந்தபாரங்களெல்லாம் படித்து இப்போது பிளாட்பாரத்தில் உரங்குகிறாராக்கும்,” நான் ஆவேசத்துடன் சொன்னேன். என் ஆவலை அதிகமா தூண்டாதபொருட்டு அவள் சொன்னாள். “அவர் எவ்வளவு படித்திருக்கிறாரென்பது அவர் வீட்டிலுள்ளவருக்கே தெரியாது. ஹபீப்! செகன்ட்பாரம் படித்ததுதான் எல்லாருக்கு தெரியும். வெளியூர்களில் ஏதோ படித்ததாக பார்த்தவர் சொன்னார். ஆனால் எவ்வளவு என்பது தெரியாது.”

“இப்போ அவர் என்ன செய்கிறார்?”

“சும்மாதான் சுற்றிக் கொண்டு கதைகளை எழுதி நாட்டிற்கு சேவை செய்கிறார்.”

“அவர் கை சிலவுக்கு எங்கிருந்து வருகிறது?”

“பெஜவாடா ஷாப்பில் அவர் தந்தை ஏஜன்டாக இருக்கிறார். மாதம் அவர் பதினைந்து ரூபா செல்வகுமாரன் செலவுக்காக அனுப்புகிறார்.”

நான் இவைகளைகேட்டு பேசாமலிருந்தேன். என்னையுமறியாமல் என் முகத்தில் ஏனோ சோககுறிகள் படர்ந்தது. நான் மவுனமாக இருப்பதை பார்த்து பரிதாபகுரலில் இர்ஷாத் கேட்டாள். “ஏன் ஹபீப், ஒரு மாதிரியாக உட்கார்ந்துவிட்டே?”

“ஒன்றுமில்லை. உரவு இருந்தும் போக்குவரத்து இல்லாத காரணத்தினால் யாரோபோல் தெரிகிறது. இதை வெளியே சொன்னாலோ வெட்கம். நினைத்தாலோ துக்கம்.”

“இப்ப என்ன அவர்களும் உன்னைப்போல் [illegible] வசித்தால் உரவுபோல் தெரியும்.”

187018

இர்ஷாத்துடைய இவ்வார்த்தை, சாட்டையால் சிக்கிய வேட்டைபோல் என்மனம் குமுரியது. "திருடினவன் ஒரு புறமிருக்க தண்டனை மற்றொருவனுக்கு அளிக்காதே இர்ஷாத்! வாழ வகையற்றவர்கள் தான் ஏழை பணக்காரர் என்று வேற்றுமை பிரிப்பார்கள். இதுவரையில் அவ்விதமான நீச செயலுக்கு என் மனதில் இடம் கொடுத்தது மில்லை கொடுக்கவுமில்லை கொடுக்கபோவது மில்லை."

"ஆமா இந்த விஷயங்கள் எல்லாம் உனக்கெப்படி தெரியும்?"

"நம் சிநேகிதி குஷ்தர்ஜான் சொன்னாள்."

"என்னிடம் ஒன்றும் சொல்லவில்லையே?"

"இதை பற்றி நீ கேட்டிருந்தாலல்லவா சொல்லி இருப்பாள்."

"அது சரி குஷ்தர்ஜானுக்கு எப்படி தெரியும்?"

"குஷ்தரும் ரஜாக்பாக்ஷாவின் தங்கை சமிதாவும் இணைபிரியா சகிகள். அவர்களிடம் செல்வமில்லை என்றால் உறவு இருந்தும் பாராமுகமா இருக்கிறார்."

செல்வந்தர்கள் எல்லாம் இருதய மற்றவர்கள்தானா? இது உண்மையானால் நான் ஏன் பணக்கார குடும்பத்தில் பிறந்தேன். இனம் இனத்தை சேருமென்பார்களே அது பொய்தானா? இவ்விதமாக எண்ணமிட்டுக் கொண்டிருக்கும் போது, "ஏண்டி உன்னை எங்கேயும் வந்து கேட்கவில்லையா?" அவசிய மில்லாததும் அனாவசியமான கேள்வியும் இர்ஷாத் அப்போது கேட்டாள்.

"நம் அந்தஸ்துக்கு உயர்ந்த இருதயமற்ற இடையர்கள் யாரும் வந்து கேழ்கவில்லை. ஏழ்மை தனமுள்ள எழிலரசர்கள் வந்து கேட்டார்கள். பணத்திற்கு அடிமையுள்ள பேடி பசங்கள் குடுப்பார்களா?" ஆத்திரமும் வெறுப்பும் கலந்தபடி சொன்னேன்.

"அப்படியானால் ஏழையை மணம் புரியவும் உனக்கு இஷ்டம் தானா?" ஆச்சரியத்தோடு கேட்டாள். "அலங்கார ஆடைகள் அணிந்து அரசாட்சி புரியும் அரசனை இருந்தால் என்ன? அயலார்களிடத்தில் கையேந்தி பிச்சை எடுக்கும் ஆண்டியாக இருந்தாலென்ன? அழியா செல்வமாகிய அன்பு என்று ஒன்று இருந்துவிட்டால் அதுவே இன்ப வாழ்வின் பொக்கிஷம்."

"வாய் அளவில்தான் இப்பேச்சே தவிர செயல் அளவில் ஒன்றுமில்லையே.?"

"சமயம் நேரும்போது இன்ஷா அல்லா கண்டிப்பாய் செய்தே காட்டுவேன். அது இருக்கட்டும்." ஒரு நாளைக்கு சமிதாபானுவை

போய் பார்த்து வரவேண்டும். ரஜாக்பாக்ஷாவை பார்க்க வேண்டு மென்ற ஆவலினால் இப்படி சொன்னேன்.

"ஏன், ரஜாக்பாக்ஷாவைதான் பார்க்கவேண்டு மென்றால் வெட்கமா" என் மனதிலுள்ளதை அறிந்தவள் போல் சொன்னாள்.

"எப்பவும் உனக்கு வேடிக்கைதானடி?"

"நான் சொல்வது வேடிக்கையானால் நாம் ஏன் அங்கே போக வேண்டும். நீ பார்க்க கோரும் சயிதாவையே இங்கு தருவிக்கலாமே?"

"அவள் ஒருவளை பார்த்து விட்டால் போதுமா? மற்றவர்களை பார்க்க வேண்டாமா? எல்லாரையும்தான் பார்ப்பேன்."

"சாப்பாடுவந்து விட்டது. சாப்பாட்டிற்கு பிந்தி எல்லாம் பேசலாம்வா என்று என்னை இழுத்தாள். நானும் மறுமொழி கூறாமல் அவள்பின் தொடர்ந்தேன்."

இருவருமாக லுஹர் தொழுகையும் முடித்துக் கொண்டு சிறிது நேரம் பல்லாங்குழியும் ஆடிவிட்டு சாயிந்திரம் டிபன் தயார் செய்து கொண்டு ஹாலில் வந்து அமர்ந்து டிபன் சாப்பிட்டானதும், கேட்டலிலிருந்த டீயை கோப்பையில் ஊற்றிகொண்டே இர்ஷாத் சொன்னாள், "ரஜாக் பாக்ஷா வீட்டார் மீது இப்போது காட்டும் அன்பும் அக்கறையும் இதற்கு முன் எங்கேடி போய் இருந்தது"

"அவங்கவிஷயத்தை பற்றி என்னிடம்யாரும் சொல்ல வில்லை நானும் அவர் வீட்டுக்கு போனது கிடையாது. அவர்கள் ஏழை என்பதற்காக அல்ல. நான் சங்கோஜமின்றி பேசுவதற்கு நம் வயதுள்ளவர்கள் அங்குஇருக்கிறார்கள் என அறியாத காரணத்தால் அப்படியும் போய் பார்க்கவேண்டு மென்று பலமுறை நினைத்தேன். ஆனால் சந்தர்ப்பம் தான் வாய்க்கவில்லை. இது சொல்லி கொண்டு இருக்கும் போது. "அஸ்ஸலாமு அலைக்கும்" என்ற சப்தம் கேட்டு எங்கள் இருவர் கண்களும் நடைபக்கம சென்றன. குஷ்தான் வந்துக் கொண்டிருந்தாள். அவளின் இந்த எதிர்பாராதவருகை நமக்கு வியப்பை ஊட்டியது, என்கிலும் அவள் செய்த ஸலாமுக்கு "வஅலைக்கு முஸ்ஸலாம்" எனபதில் அளித்து விடடு கொஞ்சம் தொலையில் இருந்த நாற்காலியை இழுத்துஅருகில் போட்டு "உட்கார் குஷ்தர் என்றேன்."

"நீ இங்கே எப்போது வந்தாய்? கேட்டு கொண்டே நாற்காலியில் அமர்ந்தாள்."

"வானியம் பாடியிலிருந்து ஷம்ஷுன் ஹாரை கேட்க வருவதாலே இர்ஷாதை தனியாக விட்டு விட்டு எல்லோரும் இவள் அத்தை வீட்டுக்கு சென்று விட்டார்கள். அதனாலே காலையில் என்னை கூப்பிட்டு அனுப்பினுள்" என் பேச்சை முடிப்பதற்குள் குஷ்தர் சொன்னுள் "அந்த விஷயம் எனக்கும் தெரியும், எங்கேயோ போகசந்தர்ப்பம் வாய்க்கவில்லை என்ருயே எந்த இடத்திற்கு"? இதை கேட்டுக் கொண்டே நம் அனுமதியும் பெருமல் கேட்டிலில் இருந்த டீயை கோப்பையில் ஊற்றி குடிக்க ஆரம்பித்தாள். "கதை மாரலாக அவள் கழுத்தில் தாலி கட்டிய காதலர் வீட்டுக்கு" என்னை கேட்ட கேள்விக்கு இர்ஷாத்பதில் சொன்னுள்.

"எந்த காதலரடி? அவர் பெயரென்ன? என்னிடம் சொல்ல மாட்டாயா?" என்று மீண்டும் என்னை நோக்கி கொஞ்சும் பாவனையில் குஷ்தர்கேட்டாள்.

"அவள்தான் பைத்தியகாரீ சொல்கிருள் என்ருல் நீயும் பைத்தியம் மாதிரி அதை நம்பிகேட்கிருயே!"

"குஷ்தர்! அவள் சொல்ல மாட்டாள். நான் சொல்கிறேன் கேள்" என்று இர்ஷாதே சொன்னுள். "காதலியின் வேதனை என்றகதையை படித்து ரஜாக்பாக்ஷாமீது காதல் கொண்டு கதையிலுள்ள காதலிபோல் வேதனைபடுகிருள், அவரை பார்க்க இவளுக்கு சந்தர்ப்பம் வாய்க்க வில்லையாம்."

"அப்படியா சரி, நாளையதினமே அவரைபார்க்க சந்தர்ப்பம் அளித்தால் எனக்கு என்னடி சன்மானம் அளிப்பாய்?" குஷ்தர் என்னை கேட்டாள்.

கல்யாணமாகி விட்டால் எனக்கு என்ன பரிசுகுடுப்பாய் என்று கேட்டதற்கு இர்ஷாத் அளித்தபதில் என் ஞாபகத்திற்கு வந்தது. ஆகவே சற்றும் தயங்காமல் பதில் சொன்னேன். "நீ பெற்றிருக்கும் பிள்ளைக்குநான் பெண்பெற்று கொடுக்கிறேன். இருவருக்கும் மணம் செய்து கண்குளிரபார்க்கலாம்" இதை சொல்லி விட்டு நம்மூவரும் ஒன்ருகசிரித்தோம்.

"அதுபோகட்டும் குஷ்தர் நீ வந்த விஷயம் என்ன அதை முதலில் சொல்லு" என்று இர்ஷாத்வினவினுள்.

"ரஜாக் பாக்ஷாவை பார்க்க ஹபீப்துடிப்பதை பார்க்க என்னுல் சகிக்க முடியவில்லை. அதனுல் நாளை உங்க இரண்டு பேரையும் ரஜாக்பாக்ஷா வீட்டிற்கு பக்கத்தில் புது வீட்டிற்கு அழைப்பதற்காக வந்தேன்."

"நாளையே குடிபோகிறீர்களா?" நான் அவசரத்துடன் கேட்டேன்.

“நாளைக்குதான் என்று இப்ப சொன்னாளே மீண்டும் சந்தேகத்துடன் அவ்வளவு அவசரமாக கேட்கவேண்டுமா?” இர்ஷாத் கோபமும் கிண்டலும் பரிகாசும் கலந்தகுரலில் சொன்னாள்.

“சரி, நேரமாகிறது, இன்னும் இரண்டு வீட்டுக்குபோய்சொல்ல வேண்டிருக்கு. நாளைவண்டி அனுப்புகிறேன், இருவரும் வாருங்கள் நான் வருகிறேன்” என்று சொல்லி விட்டு குஷ்தர்ஜான் போய் விட்டாள்.

நாளை அங்கு போவதை பற்றி இர்ஷாத் ஏதேதோ பரிகாசம் செய்துக் கொண்டிருந்தாள். நான் எலலாவற்றிற்கும் பொய் கோபத்துடன் கடிந்து கொண்டிருந்தேன். அஸர் பாங்கு சப்தம் அவள் பரிகாசத்திற்கும் என் பொய் கோபத்திற்கும் முற்று புள்ளி வைத்தது. நாம் இருவரும் அஸர் தொழுதுக் கொண்டு, பணக்காரர் ஏழை என்ற பிரச்சனையிலிருக்குபோது மக்ரிப் வேளையும் வந்ததால் மக்ரிப் தொழுதுக் கொண்டு வாசலுக்கு வந்தோம். கதவு தட்டும் சப்தத்தோடு “இர்ஷாத் இர்ஷாத்” என்ற சப்தமும் வந்தது. “இதோவந்து விட்டேனம்மா” என்று சொல்லிக் கொண்டே இர்ஷாத் கதவை திறந்தாள். இர்ஷாத்துடைய அம்மாவும் அக்காவும் அவள்பின் அவள் தம்பிகாஜாவும் கையில் சாப்பாடு டிபனுடன் வந்தான். அவர்கள் வந்ததும் வராததுமாக இருக்கும்போதே “பிள்ளை வீட்டாருக்கு பெண்பிடித்ததா அம்மா?” சந்தேகத்துடன் இர்ஷாத் கேட்டாள்.

“கல்யாண நாளே நிச்சயித்த பிறகு பெண்பிடித்ததா என்ற கேள்விக்கு இடமேது?” இர்ஷாத் பேகமுடைய அக்கா குல்ஷாத் பேகம் பதிலளித்தாள்.

“அப்படியானால் இர்ஷாதுடைய கல்யாணமும் நிச்சயித்திருப்பீர்கள்” நான் சிரித்துக் கொண்டே கேட்டேன்.

“இருவர் கல்யாணமும்தான்” இர்ஷாதுடைய தாயார் சுருக்கமாக பதிலளித்தாள்.

“எந்த மாதத்தில் செய்ய முடிவு செய்தீர்கள்?” நான் தொடர்ந்து கேட்டேன்.

“ரஜ்ஜப் மாதம் பிறை 29க்கு இர்ஷாத் கல்யாணமும், ஷாபான் பிறை 1க்கு முஹம்மத் யூசுப் வலிமாவுடன் ஷம்ஷுன்ஹாருக்கு நிக்காஹ் செய்ய தீர்மானித் திருக்கிறோம்” அவள் தாயார் சொன்னாள்.

‘ரஜ்ஜப்! இடையில் இன்னும் இரண்டு மாதம்தானே இருக்கிறது. இந்த இரண்டு மாதமும் இர்ஷாதுக்கு இரண்டு வருடங்களாகத் தோன்றும்” பரிகாசத்தோடு சொன்னேன்.

"முதலில் சாப்பிட்டு வந்துவிடுங்களம்மா. மறுபடியும் பேசுவீர்கள்" என்று குல்ஷாத் பேகம் அன்புடன் ஆக்ஞை விட்டாள். நாம் சாப்பிட்டு வந்தோம்; என்னை அழைத்து செல்வதற்காக வந்த என் தங்கை ரவுனகுன்னிஸா இடம், "நாளை புது வீட்டில் குடி போகுவதற்காக குஷ்தர் வந்து கூப்பிட்டாளாம், அதனுல் காளைக்கு அங்கு போய்விட்டு நாளை ராவிக்கி வருகிருளாம், என்று அம்மா இடம் சொல்லு ரவுனக்" இர்ஷாதே சொல்லி அனுப்பி விட்டாள்.

அன்றிரவு இஷா தொழுகைக்குபின் சற்றுநேரம் பேசிவிட்டு படுத்துக் கொண்டோம். நேற்று கவலைப் பட்டுக் கொண்டிருந்த இர்ஷாத் இன்று இன்ப கனவுகளை காண, அதிசீக்கிரமாய் ஆனந்த நித்திரையில் ஆழ்ந்து விட்டாள். ஆனுல் எனக்கு தூக்கம் வரவில்லை.

சொர்பன லோகத்திற்கு போக வேண்டிய என்னை, கற்பனை கப்பலில் ஏற்றி காதல் லோகத்திற்கு போகும்படி கட்டளை யிட்டாள். சிந்தனை என்ற சீதேவி என் மனக்கடலிலே கற்பனை கப்பல் அதி வேகமாக போக தொடங்கியது.

"காதலியின் வேதனை" கதையை படித்தபின் ரஜாக் பாஷா மீது எனக்கு அளவில்லாமலும் அர்த்த மில்லாமலும் ஆசை வரக் காரணமென்ன? அவரையே என் மனம் அதிகமாக நாடுவது ஏன்? மண்ணுலகத்தை மறந்தாலும் அவரை மறக்காதபடி என் மனதில் அவர் பெயரை அச்சிட்டது யார்? மணந்தால் அவரையே மணக்க வேண்டும். மற்றவருக்கு மாலையிட நேர்ந்தால் மரண மாதாவை மார் போடு அணைத்து மண்ணுலகத்தையே மறக்க வேண்டு மென்று மனச்சாட்சி கூறும் மர்மமென்ன? அமைதி நிலவக்கூடிய மனதில் புரியாத புயல்வீசும் புதுமை யாது? நேற்றுவரையில் இர்ஷாத் பேகம் மனவீட்டில் விருந்தாளியாக இருந்த வேதனை வெள்ளி, நான் அழைக்கு முன்பு என் அனுமதியின்றி என் மன வீட்டில் குடி புகுந்த காரணமென்ன? இதற்குதான் காதலென்று பெயரா? அப்படியானுல் ரஜாக் பாஷாவும் என்னை காதலிப்பாரா? இதற்குமுன் அவர் என்னை பார்க்கவில்லை. நானும் அவரை பார்த்ததில்லை. நாளை நான் அவரை பார்த்தாலும், அவர் பார்க்கும்படி எதிரில் நிற்கவும் முடியாது இந்த தர்ம சங்கடத்தில் எப்படி காதலை பரிமாறிக் கொள்ளமுடியும்? இவ்வாருக ஏதேதோ என் மனமே என்னைக் கேட்டது. சிந்தனை அதிகமாக செலவுசெய்தால் மூளை கொதிப்பு ஏற்படும் என்பதை அறிந்த நித்திரா தேவி தன் குளிர்மையான போர்வைக்குள் என்னை அணைத்துக் கொண்டாள்.

(தொடரும்.)

விகடத் துண்டுகள்.

புருஷன் : (மனைவியிடம்) நான் என்னை ரூ. 50000க்கு இன்ஷ்யூர் செய்து விட்டேன். இனி எனக்கு ஏதாகிலும் ஆனாலும் நீ பிழைப்புக்கு கவலைபட வேண்டியதில்லை.

மனைவி : (புருஷனிடம்) நீங்கள் ரொம்ப முன்யோசனையுடன் செய்தீங்கோ. இனி உங்கள் உடலுக்கு ஏதாகிலும் வந்தாலும் டாக்டரை போய் பார்க்க வேண்டியதில்லை.

“ நானும் என் மனைவியும் சண்டை போட்டால் நான் தான் கடைசியாக பேசுவேன் ”

“ அப்படியா ?”

“ ஆமாம். நான் தான் மன்னிப்பு கேட்பேன்.”

உபாத்தியாயர் அம்மா: (பள்ளிகூட பிள்ளைகளுக்கு பறவைகளைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிருள்) எனது வீட்டில் ஒரு புரு இருக்கிறது. அது ஒன்று செய்யும். அதை என்னுலேயும செய்ய முடியாது. அது என்னவா இருக்குமென்று உங்களால் சொல்ல முடியுமா ?

ஒரு சிறு பையன் : அது ஒரு தட்டில் நின்றுக் கொண்டு குளிக்கும்.

துணிகடை ஒன்றை திருடுவதற்காக செல்லும் இருவர்களில்

1-வது திருடன்: (2-வது திருடனிடம்) நம்ப வேலையை ரொம்ப நாள் தள்ளி வைக்கக்கூடாது. பண்டிகைகளெல்லாம் வருது. சரக்குகளெல்லாம் அப்புரம் விற்றுப் போகுமே.

புஸ்தகம் வாங்கவந்தவர் : (கடைக்காரரிடம்) அந்த புஸ்தகம் பேர் மறந்து போச்சு. ஆனுல் அது பச்சை நிறமாக இருக்கும்; காகிதத்தில் அச்சு போட்டிருக்கும்.

ஒருவர் போதனை செய்தார். அப்போது அவர், “ எனது சகோதரர்களே மற்றவர் மனைவிகளுடன் தொடர்பு வைத்துக் கொள்ளாதீர்கள் ” என்ருர்.

அப்போது சபையில் இருந்த ஒருவர் எழுந்து தனது விரல்களால் சிட்டிகை போட்டு விட்டு “ ஓஹோ ” என்று சொல்லி விட்டு உட்கார்ந்து விட்டார். ஆனுல் போதனை செய்பவர் அதற்கு

ஒன்றுமே சொல்லாமல் தனது போதனையை செய்து விட்டு வெளியே வந்த போது சபையில் கோஷ்டம் செய்தவர், "நான் உங்கள் சபையில் கோஷ்டம் செய்ய வேண்டு மென்று அப்படி செய்யலே. எனக்கு அப்போ தான் எனது குடையை நேற்று எங்கே விட்டேன் என்று ஞாபகம் வந்தது" என்றார்.

ஒரு தொழிற் சாலையில் வேலை செய்யும் ஒரு பெண்ணிடம்,

மானேஜர்: ஓ பெண்ணே, நீ இங்கு வேலை செய்வதை விட்டு இனி நின்றுவிட வேண்டும். இங்கு வேலை செய்யும் நாலு பேர் உன்னை கலியாணம் செய்துக் கொள்ளுவதற்காக சம்பளத்தை உயர்த்தி கேட்கிறுங்கோ.

மனைவி: (புருஷனிடம்) அதோ பார் அவன் அவளை நிறைய முத்தம் கொடுக்கிறுன். நிற்கும் போது கொடுக்கிறுன், உட்காரும் போது கொடுக்கிறுன், நடக்கும் போது கொடுக்கிறுன். நீயும் ஏன் அப்படி செய்யக் கூடாது.

புருஷன்: அவள் யாருன்னு கூட எனக்கு தெரியாதே.

உபாத்தியாயர் அம்மா பிள்ளைகளுக்கு பறவைகளையும், மிருகங்களையும் முத்தமிடுவதால் ஏற்படும் அபாயங்களைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறுர்கள்.

உபா. அம்மா: (ஒரு பையனிடம்) இவ்வாறு முத்தம் கொடுப்பதால் ஏதாவது அபாயம் ஏற்பட்டதா? உதாரணம் கொடுக்க முடியுமா?

பையன்: கொடுக்க முடியும். எங்க சித்திகூட ஒரு பூனை குட்டிக்கு முத்தம் கொடுப்பாள்.

உபா. அம்மா: என்ன நேரிட்டது?

பையன்: பூனை செத்துப் போய் விட்டது.

"டேய் ரஹ்மத் பம்பாயிக்கு போயிட்டு வந்த பிறகு உனக்கு அவன் யாருன்னே தெரியருது கஷ்டம். அவன் பம்பாயிலே பணத்தை எல்லாம் நஷ்டமாக்கி விட்டு பண ஒன்றும் இல்லாமல் வந்திருக்கிறுன்"

"அப்படினு அவன் எனக்கு தெரியவே தெரியாது."

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

187018

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்
அவர்களின் அருமைப் புதல்வி

பாத்திமா நாயகி (ரலி) ஜீவிய சரித்திரம்.

இச்சரித்திரத்தில் ஹஜ்ரத் பாத்திமா நாயகி அவர்களின் மாதாவாகிய உம்முல் மூஃமினீன் கதீஜா நாயகி அவர்களின் வம்ச பரம்பரையும், அவர்களின் பிறப்பும், பாத்திமா நாயகியின் பிறப்பும், பால்யகால அறிவும், பரஸ்பர அன்பும், நாயகியின் திருக்கல்லியாணமும், அவர் தம் வீட்டில் குடித்தனம் நடத்திவந்த ஒழுங்கும் தனது பார்த்தாவாகிய அலியாருக்கு இணங்கி நடந்த அழகும், அவர்களின் தயாள சிந்தையும், உழைப்பும், ஆண்டவனின் மீது பக்தியும், வணக்கமும், கபூலாக்கப்பட்ட துஆவும், றஸூலுல்லாவுக்கு பாத்திமா நாயகியின்பால் இருந்து வந்த அன்பும், நாயகிக்கு தம் தந்தையின்பால் இருந்துவந்த பிரியமும், அவர்களின் நாணம் அடக்கம், அச்சம் முதலிய ஒழுங்குகளும், இமாம் ஹஸன் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்களின் மேம்பாடும், நாயகியின் வாபத்தும் விபரமாய் கூறப்பட்டிருப்பதுடன் இந்நாயகியின் ஜீவிய சரித்திரத்தில் நம் சகோதரிகளுக்கு அரிய போதனைகளும் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு முஸ்லிமும் இச்சரிதை வாசித்துணர வேண்டியது மிக்க அவசியமாகும்.

இதன் விலை கிளேஸ் ரூ. 1–12–0
ஷை அறபுத்தமிழ் விலை ரூ. 2–14–0

ஸூறத்து யாஸீனும் துஆவும்.

யாஸீன் ஸூறாவுடைய அரபு ஆயத்துகளைத் தமிழ் எழுத்தைக்கொண்டு திருத்தமாய் ஓதும்படியான அமைப்புகளுடையதாகும் இந்தக் கிதாபு. இதில் பெரிய துஆவும், பாத்திஹா ஓத வேண்டிய தர்த்திப்புகளும் ஒவ்வொரு விஷயத்திற்கும் ஓத வேண்டிய துஆக்களும் தல்கீனும் அதன் தர்ஜுமாவும் சேர்த்து அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அணா 7

அறபு யாஸீன் விலை அணா. 2 அறபுயாஸீன் அஸ்மாவுல் இலாமுடன் விலை அணா. 3

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

கைத் தொழில் சம்பாதனை வழிகள்.

இந்த புத்தகத்தில் அடங்கியுள்ள விஷயங்களுள் சில:—

ஹேர் ஆயில்கள், ஊதுபத்தி, அச்சாபீஸ் மைகறை எடுத்தல், அச்சாபீஸ் கல் பிளவு பட்டால், அத்தரும் மற்ற வாசனை திரவியங்கள் தயாரித்தல், தைலங்கள் தயாரித்தல், எஸ்ஸன்ஸ்கள் தயாரித்தல், நிறங்கள் தயாரித்தல், டின்ச்சர்களும் ஸ்பிரிட்களும் தயாரித்தல், ஆரஞ்சு தோல் எக்ஸ்டிராக்ட், ஆட்டுத் தோல் பதனிடுதல், இரும்பு பாலிஷ், இரும்பும் கல்லும் சேர்க்க சிமென்ட், மைகறைகள் அப்புறப்படுத்தல், இருளில் புலப்படும் எழுத்துக்களுக்குரிய மை, இயந்திர சலுஷன், இங்கிலீஷ் சோப் செய்தல், உயர்ந்த வார்னிஷ், உடைந்த கண்ணாடியை ஒட்டும் சிமென்ட், ரோம சங்காரி, ரோம சங்காரி சோப், உடைந்த கண்ணாடி மூலம் சம்பாதித்தல், உயர்ந்த கோந்து பசை, போமேட்கள் செய்தல், ஊறுகாய் நாள்பட கெடாதிருக்க, எழுதுவதற்கு சாக்பீஸ், எலுமிச்சம்பழம் கெடாதிருக்க, அதன் சாறு கெடாதிருக்க, ஐஸ்கிரீம் செய்தல், மரசாமான்கள் ஒட்டவைக்கும் சிமென்ட், கந்தக குவளை, உறைகளை ஒட்டும் பசை, கஜூர் கொட்டையினால் பொத்தான்கள் செய்தல், இங்கிகள் செய்தல், கற்பூர கிளாஸ், கனிவர்க்கங்கள் கெடாதிருக்க.

கஸ்தூரி பில்லைகள், கஸ்தூரி எண்ணெ, காடி தயாரித்தல், காடியை வெள்ளை நிறமாக்க, காசுகட்டி செய்தல், காஸினி வர்ணம் செய்தல், கிளிஸரின் சோப் செய்தல், கில்ட்வேலை சம்பந்தமானவை, கொசு, மூட்டை பூச்சி ஆகியவைகளை கொல்ல, சர்க்கரையில் விளையாட்டு சாமான் செய்தல், சரக்குகளின் சத்து எடுத்தல், சாயத் தொழில், கண்ணாடி மீது சித்திர வேலை செய்தல், ரோமங்களை கறுப்பாக்குதல், செம்பை வெள்ளிநிற மாக்குதல், வெள்ளிப் பாத்திரங்கள் மீது எழுத்து வரைதல், பாலிஷ்கள் செய்தல், டூத்பேஸ்ட் பவுடர் செய்தல், தங்கமுலாம், தயிர் உடனே தயாரித்தல், தியேட்டர் ஆக்டர்களுக்கு முகவஜிகர பவுடர், தேன் தயாரித்தல், தேமிலை பில்லைகள், தோலைபதனிடுதல் சம்பந்தப்பட்டவைகள், சர்பத்துகள் தயாரித்தல், சீசாவாய்களை அடைத்தல், புழு பூச்சிகளை கொல்லும் பவுடர், பென்சில் தயாரித்தல, பெப்பர்மின்ட் தயாரித்தல், பேஸலி சாமான்கள் தயாரித்தல், மெழுகினால் பூ தயாரித்தல், யானை தந்தத்தை வளைத்தல், ரப்பர் ஸீல் தயாரித்தல், தாச்சினுப்பொடி செய்தல், ஸீல் வைக்கும் அரக்கு.

இது 224 பக்கங்களை கொண்ட, பெதர்வைட் பேப்பரில் அச்சிட்டு கலிகோ பைண்ட் செய்த புத்தகம் விலை ரூபா. 2–8–0

இடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.